ஞானசம்பந்தம்

ர் 10.] கரஹூ ஆவணிமீ 10—9—51. [இதழ் 10.

13—8—51ல்

குடந்தை

மங்களாம்பிகா

நிலையத்தில்

சிவனடியார்

திருக்கூட்டத்தினரும்,

சைவப்

பெருமக்களும்

துதிப்பாடல்கள்

வாசித்தல்.

ஆசிரியர்: காசலிங்கத் தம்பிரான்.

உதவி ஆசிரியர்: ச. தண்டபாணி தேசிகர். தருமபுர ஆதீன

தருமபுர ஆதீன வெளியீடு.

திருக்குறள் - உரைவளம்

பொருட்பால்

அறத்துப்பாலைப் போலவே உரைப்பகுதி, உரை விளக்கப்பகுதி, மேற்கோள்பகுதி, ஒப்புமைப்பகுதி, இவைகள் அடங்கியன.

சிறப்பாகத் தொகுப்புரை, முதுமொழிவெண்பாக்கள், பழமொழிப்பகுதிகள், குறிப்புரை ஆகிய இவைகளும் இப்பதிப்பில் சேர்க்கப்பெற்றிருக்கின்றன.

M. O. மூலம் முன்பணம் அனுப்பிப் பெறவேண்டும்.

கிரௌன் 1×4 சைஸ் 1128 பக்கங்கள்.

காலிகோ கட்டிடம் விலை ரூ. 13—8—0

தபாற்செலவு வகையரு ரூ. 1—8—0

கிடைக்குமிடம்:

மானேஜர்,
தருமபுர ஆதீனம்,
தருமபுரம், மாயூரம் P. O.
தஞ்சாவூர் ஜில்லா.

மாயூரம் நகராண்மைக்கழக உயர்நிலைப்பள்ளியில்

நகரப்பெருமக்கள் சார்பில்
முனிசிபல் மானேஜர் திரு. M. A. ஜகந்நாத பிள்ளை பாராட்டுரைபடித்தல்

உ
குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 10] கரஹ ஆவணி மீ 10—9—51. [இதழ் 10

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய் பிஞ்ஞகா பிறப்பிலீ
கொன்றையம் முடியினாய் கூடலால வாயிலாய்
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. —சம்பந்தர்.

வரவேற்கிறோம்.

"அச்சம் இல்லை அச்சம் இல்லை" என்று அமரகவி பாரதியார் இந்த நூற்றாண்டிலே சொல்லிவைத்தார். ஆனால் இது மிகப்பழையவார்த்தை. ஏழாம்நூற்றாண்டில் வாழ்ந்த ஒரு ஞானவீரர் அப்பர் சொன்னதுதான் அது. "உச்சிமீதில் வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சம் இல்லை அச்சம இல்லை" என்று, விழாது என்ற துணிவு நன்கு வேரூன்ற அப்படி விழுந்தாலும் அச்சமில்லை என்று பாரதியார் கூறுகிறார். இதில் உண்மை வீரம அவ்வளவாக விளங்கவில்லை என்னலாம்.

ஞானவீரரோ அரசன் அழைககிறான்; அதுவும் மதமாறிய குற்றம் சுமத்தி. ஏவலாளர் கையில் வில்லும் அம்பும கம்பும் கழியுமாக வந்து அழைககின்றனர். உறுதியாகத் தாம் அரசன் ஆணைககு உயிர்விட்டுத்தான் ஆகவேண்டும் என்ற எண்ணம் வேரூன்றியிருககிறது. அந்தநிலையில் உண்மை ஞானம் வீர உணர்ச்சியைக் கொடுககிறது. அப்போது பாடுகிறார் "நாம் ஆர்க்கும் குடியல்லோம், நமனை அஞ்சோம" என்று. இங்கே சிநதியுங்கள். அரசியல கர்மஞானியைக காட்டிலும் உண்மைஞானியாகிய கடவுள்ஞானி, யாம் அஞ்சுவது

அரசனுக்கன்று; நேர்மையுடையவன், கடமை தவரு தவன் அரசனுக்கு அஞ்சவேண்டியதில்லை; சட்டத்திற் குட்பட்டவனுக்கு அரசனும் மட்டம், ஆனால் யாம் அஞ்சுவது யமனுக்கு; மற்றோரிடத்திலே "இறப்பதனுக்கு என்கடவேன்" என்பர்; அப்படிப்பட்ட இறப்பினுக்கும் இப்போது அஞ்சோம் என்கிறார். அவ்வளவு உறைப்பு ஏது என்னலாம். நாம் சங்கவெண் குழையோர் காதில் கோமாற்கே வழிவழியடிமை ஆதலின் இதனை நன்கு உணர்க என்கிறார் அப்பர். அப்படித்தானே இருப்பர் அந்த சமயாசாரிய பரம்பரையில்வந்த அடியார்களும் அருளாளர்களும் கடமை தவருதவனுக்கு - ஒழுங்கான வாழ்வும் உண்மையுரையும் உடையவனுக்கு எந்தசட்டங்களும் என்ன செய்ய இயலும்? நேர்மை யானவன் போக்கிற்குச் சட்டங்கள் இடையூறுசெய்யாமலிருந்தால் அதுவேபோதும் என்றுகூட சிலசமயங்களில் தோன்றி விடுவதுண்டு. அப்படியாகாமலிருக்குமானால் அத்தகைய சட்டங்களை எந்தச்சமயவாதியும் முதலில் வரவேற்கத் தவறமாட்டான். அப்படி வரவேற்காதவன் கடமை உணர்ந்து நடவாதவனாக இருத்தல்வேண்டும். "வரவரக் கண்டு ஆராய் மனமே" என்பதுதான் எங்கள் ஆசாரிய வார்த்தை.

ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி திருப்பனந்தாள் சுவாமிகளால் ரூ. 35,000 அளிக்கப்பட்டு, அப்பணத்தின் வட்டி உதவியால் திருநாரையூர் தேவஸ்தானத்தில் திருமுறைப் பாராயணம் செய்யக் கட்டளையிட்டபடி அந்த அறம் 1—9—51 சனிக்கிழமை முதல், அவர்களால் நியமிக்கப்பெற்ற சட்டநாத முதலியாரவர்கள் தினமும் காலையிலும் மாலையிலும் திருமுறைப் பாராயணம் செய்துவருகிறார்கள்.

குடந்தை ஸ்ரீ மங்களாம்பிகா நூல்நிலயத்தில்
நிகழ்ந்த வரவேற்புக்கு

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் ஆசியுரை

13—8—51.

அன்பர்களே!

சிவனடியார் திருக்கூட்டத்துத் தலைவர் சைவ வரம்பு கடவாத அன்பர் .பி. டி. குமாரசாமி செட்டியார் அவர்கள் இங்கு வரவேற்பு வாசித்து அளித்தபோது மாலையைத் திருவடிகளுக்குச் சாத்தினார்கள். சைவம் திருவடியிலே இருக்கிறது. சிவனடியார்கள் அடையும்பேறு திருவடிப்பேறு. திருவடி என்பது திருவருள்; அது சிவசக்தி. சைவத்தில் முத்திநிலையும அது. திருவடிநிழலை அடைந்தார்கள் என்று கூறுவதையும்கேட்டிருப்பீர்கள். திருவடியைப்பற்றி அன்பர் சொல்லுகிறார். அவர்யார்? அப்பர் அடிகள். எப்படி? தக்கயாகத்திலே யாகத்தை அழிப்பதற்காகத் தூக்கப்பட்டதாம். அதே யாகத்தில் சந்திரனைத்தேய்ப்பதற்காகத் தூக்கியதும் அதனையே. ஒரு பதினாறு வயது இளம்பாலகன்; மார்க்கண்டேயன். அவனுடைய உயிரைக் காப்பதற்காக இயமனை உதைக்கத் தூக்கப்பட்டதும் அதுவே. இந்தத் திருவடியின் பெருமையை அறியாத இரண்டு பேரில் ஒருவர் வராகம் ஆனார். மற்றொருவர் அன்னப்பறவையாகப் பறந்தார். நீங்கள் நினைக்கலாம்; அன்னப்பறவையாகப் பறந்தபோது முடியைத்தானே காணப் போனார் என்று. இறைவனின் திருவடிகள் இருந்தஉயரங்கூட அவரால் காணமுடியவில்லை. அவர் காணமுயன்றதும் அடியைத்தான். அதனாலேயே திருவடியை அயனும் பிரமனும தேடினார்கள் என்று சொல்லுகிறார்கள். மேலும் பாருங்கள். அன்னம் தேடவேண்டியது எதனை? தாமரையை. தாமரை எது? அதுதான் திருவடித்தாமரை. அந்த அன்னம திருவடித் தாமரையை விட்டுவிட்டுச் சடைக்காட்டைத் தேடிச்சென்றது. பன்றி தேட

வேண்டியது காட்டை. அதைவிட்டுத் தாமரையைத் தேடிச் சென்றது. இப்படி மாறிச் சென்றதால் அறிய முடியவில்லை. வழி தவறிப் போனதால் திருவடியை அடையமுடியாமல் தவித்தார்கள். தடிப்பு ஏறிய காலத்தில் தாளடைய முடியாததுதானே!

இப்படி, தேவர்களுக்கும் வேதத்திற்கும் எல்லாம் அருமையான திருவடி நமக்கெல்லாம் இலேசாகக் கிடைத்து விடுகிறதாம். எப்படி? ஞானாசாரியன் திருவருள் இருந்தால் போதும். 'ஆசான் அருளால் அடிசேர்ஞானம் வந்திடும்; மற்றொன்றாலும் வாராது' என்று சித்தியார் சொல்லுகிறது. சிதாகாச க்ஷேத்திரமாகிய சிதம்பரத்திலே சித்சபையிலே உலகமெலாம் அசைய ஐந்தொழில்செய்ய ஆடஎடுத்ததும் அந்தத்திருவடிதான். அந்தத் திருவடிதான் உங்களையும் என்னையும் உலகத்தையும் ஆட்கொண்டது. இதுதான் திருவடிப் பெருமை. மறக்கருணை காட்டியும், அறக்கருணை காட்டியும் ஆட்கொள்ளுதலாகிய இரண்டுமே திருவருள் மயமாகிய திருவடி செய்யும்வேலை. இதைத்தான் சொல்லுகிறார் நமது அப்பரடிகள்; எப்படி?

சாட எடுத்தது தக்கன்தன் வேள்வியிற் சந்திரனை
வீட எடுத்தது காலனை நாரணன் நான்முகனும்
தேட எடுத்தது தில்லையுட் சிற்றம்பலத்து நட்டம்
ஆட எடுத்திட்ட பாதமன்றோ நம்மை ஆட்கொண்டதே.

இதுமட்டுமா? மற்றொரு இடத்திலே சொல்லுகிறார்; அதனையும் பாருங்கள். சேஷ சயனத்திலே அறிதுயில் கொள்ளுகிறார் திருமால். அவர் இடைவிடாது சிந்தித்து அரற்றுகின்ற அடியும் அது. அம்மட்டோ. பிரமன் தன்னுடைய தலைக்கு அணியாக, இந்த அடியை ஆக்கிக் கொள்ளுகிறான். கலியுகத் தெய்வமாக விளங்குகின்ற முருகன் கைதொழுது இதனை அடைகின்றார். மேலும் இத்தகைய திருவடி அன்போடு அடைந்தவர்களுக்கு எல்லாம் அடைக்கலத்தானமாய் விளங்குகிறது. இடை

விடாமல் தோத்திரிப்பவர்களின் பாவங்களெல்லாம் ஓடு கின்றன. பதினெண்கணங்கள் பாடிப்போற்றுகின்றன. இது வீரட்டானத்து இறைவன் திருவடியின் பெருமை. இதிலே ஒரு நயம். சார்ந்தவர்களுக்கு அடைக்கலத் தானமாய் இருப்பது; தோத்திரிக்கின்றவர்களுக்குப் பாவத்தைப் போக்குவது என்ற இரண்டையும் இணைத் துப் பாருங்கள். சார்தல் முதல் வேலையும் பரிவது அடுத்துள்ள தொண்டும் ஆகும். சார்ந்தால் அல்லது பரிவு உண்டாகாது என்ற சம்பிரதாயத்தையும் இவர் அறிவிப்பது நமக்கு எல்லாம் பெரிய வியப்பல்லவா! மற்ற ஒரு சிறந்த கருத்தையும் பாருங்கள். நமக்குப் பரமாசாரியராகிய முருகப்பெருமான் இத் திருவடியைச் சார்ந்து காட்டுகின்றார். இதைப் பார்த்த நாமும் திருவடியைச் சேரவேண்டும். சேர்ந்த பிறகு பரிய வேண்டும். இந்த முறை இதில் அமைந்திருப்பது நம் முடைய சைவ சம்பிரதாயத்தைக் காட்டுகிறது. அந்த பாடலைப்பாருங்கள்:-

அரவணையான் சிந்தித் தரற்றும் அடி
அருமறையான் சென்னிக் கணியாம் அடி
சரவணத்தான் கைதொழுது சாரும் அடி
சார்ந்தார்கட்கெல்லாம் சரணும் அடி
பரவுவார் பாவம் பறிக்கும் அடி
பதினெண் கணங்களும் பாடும் அடி
விரவுநீர்த் தென்கெடில நாடன் அடி
திருவீரட் டானத்தெம் செல்வன் அடி.

இனி மற்றொன்று. அப்பரடிகள் திருச்சத்திமுற்றத் தில் சிவக்கொழுந்தைப் பணிந்தார். 'கோவாய் முடுகி' என்றெடுத்துப் பாடுகின்றார். பாட்டில் என்ன விண் ணப்பிக்கின்றார்? 'கூற்றம் வந்து குமைப்பதன்முன் பூவாரடிகள் என்மேற் பொறித்து வைப்பாய்' என்று. உடனே 'நல்லூரில் வா வா' என்ற ஆணை பிறந்தது. அங்குச் சென்றார், திருவடி சூட்டப் பெற்றார். அங்குப்

பாடிய பாடல் ஒவ்வொன்றும் திருவடிப் பெருமையை அறிவிக்கின்றது.

'புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா உன் அடி என் மனத்தே வழுவாதிருக்க வரம் தரல் வேண்டும்' என்று அவரே பாதிரிப்புலியூரில் வேண்டுகின்றார். 'நாயகன் சேவடி தைவருசிந்தையும்' என்று சேக்கிழார் சொல்லியதுபோல, திருவாலவாய் சென்று பாடுகின்றபோது 'சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே' என்று ஒவ்வொரு பாடல் முடிவிலும் சிந்திக்கின்றார்கள்.

மணிவாசகத்தைப் பாருங்கள். 'சேவேறு சேவடி' 'கேடுபடாத் திருவடி' 'பூவார் அடிச்சுவடு' 'இணையார் திருவடி' என்றெல்லாம் அதில் போற்றப்படுகிறது. சுந்தரரை எடுத்துக் கொள்ளுங்கள். திருப்புன்கூர்த் தேவாரத்தில் என்ன சொல்லுகிறார்? 'தேவ தேவ நின் திருவடி அடைந்தேன்' 'நீ செய்த சீலம் கண்டு திருவடி அடைந்தேன்' 'அருள்செய்கக்கண்டு நின் பொன்னடி அடைந்தேன்' என்றெல்லாம் ஒவ்வொரு பாட்டிலும் கூறியிருக்கின்றார்களே. சங்க இலக்கியத்தை எடுத்துக் கொள்ளுங்கள், அதிலும திருவடிக் குறிப்பு இல்லையா? திருமுருகாற்றுப்படை பத்துப்பாட்டுள் ஒன்றுதானே. அதன் ஆசிரியர் நக்கீரர் சிறந்த புலவர் என்னசொல்லுகிறார். 'சேவடி படரும் செமமல உள்ளமொடு' என்றுதானே. குமரகுருபர சுவாமிகள் செந்திலாண்டவன் திருவருள் நிரம்பப் பெற்றவர். கலிவெண்பா பாடுகின்றார். அதிலே பாருங்கள், 'அடிஞானத்தாற் பொருளும் ஆன்மாவும் காட்டிக், கடியார் புவனமுற்றும் காட்டி' என்கிறார்.

திருஞானசம்பந்தரை எடுத்துக் கொள்ளுங்கள். என்ன சொல்லுகிறார்? பிரமபுரீசுவரரது திருவடிகளை வணங்கினால் பெறலாம. எதைப் பெறலாம? செல்வம பெறலாம்? எத்தகைய செல்வத்தை? அழியும

செல்வத்தையா? அல்ல. அழியாதசெல்வத்தை; பெருஞ் செல்வத்தை. அந்த அருமையானபாடலைப் பாருங்கள்.

அலைபுனல்சூழ பிரமபுரத்த தருமணியை அடிபணிந்தால்
நிலையுடைய பெருஞ்செல்வம் நீடுலகில் பெறலாமே.

அது மட்டுமா? 'அண்ணலை அடிதொழ அல்லல் இல்லையே' என்கிறார். 'சீரினார் கழலே சிந்தை செய்ம்மின்' 'எம ஐயன் சேவடி அடைந்து உய்மினோ' 'பொருந்தினார் திருந்தடி போற்றி வாழ் நெஞ்சமே' 'இறைவனது அடியிணை இறைஞ்சிவாழ் நெஞ்சமே' என்றுகூட அறிவுறுத்துகிறார். திருவும் மெய்ப்பொருளும் செல்வமும் ஆகிய எல்லாம் இறைவனது திருவடிதான் என்று எண்ணியிருந்தார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

இதுவரையில் தோத்திரத்தில் திருவடியைப்பற்றிச் சிந்திததோம். இனி, சாத்திரத்திலே பார்ப்போம்; என்ன சொல்கிறது?

"செம்மலர் நோன்றாள் சேரல் ஒட்டா
அம்மலங்கழீஇ அன்பரொடு மரீஇ
மாலறநேய மலிந்தவர் வேடமும்
ஆலயந்தானும் அரனெனத் தொழுமே"

என்பது சிவஞானபோதம். உயிர்களாகிய நாம் ஆண்டவனுடைய திருவடிகளை அடையத் தடையாய் இருப்பது மலம். அதனை நீங்கினால்தான் ஆண்டவன் திருவடியை அடையலாம. ஆண்டவன் அடியே மூக்தி நிலை என்று முடித்து இருப்பதைப் பாருஙகள். 'சிவனடியைச் சேருமுத்தி செப்புவது இங்கு யாமே' என்பது சித்தியார் வாககு ஞானநூலதனை ஓதல், நற்பொருளைக் கேட்பித்தல், தான் கேட்டல், நன்கு ஈனமிலாப் பொருள் அதனைச் சிந்தித்தல ஆகிய இவ்ஐந்தும் இறைவனடியை அடைவிக்கும் எழில்ஞான பூசை. மேலும் ஞானம் என்று பாராட்டப்படுவதும அந்தத்திருவடியே. 'இறைவனடி ஞானமே ஞானம' என்பதும் சிந்திககவேண்டியதே.

ஒருகதை ராஜகுமாரன் இளமையிலே காட்டில் வேடர்கூட்டத்திலே சிக்கிக்கொண்டான்! அவர்களைப் போலவே உண்ண - உடுக்க பழகிக்கொண்டான். தான் ஒரு அரசகுமாரன் என்பதை அறியாமலே நடந்து வந்தான். அவனை ஒரு அரசன் 'அப்பா நீ ராஜகுமாரன், அவர்கள் எல்லாம் வேடர்கள். நீ அவர்களோடு இப்படிக் கூடியிருக்கக் கூடாது' என்று உண்மையைத் தெரிவித்தான். ராஜகுமாரன் அதுமுதற்கொண்டு தன்னுடைய உண்மைத்தன்மையை உணர்ந்து ராஜகுமாரனாகவே விளங்கினன். அந்த ராஜகுமாரன் யார்? நீங்களும் நாங்களுமாகிய உயிர்கள். வேடர்கள் யார்? நம்முடைய தோல், கண், காது, மூக்கு, நாக்கு ஆகிய பஞ்சேந்திரியங்கள். இவைகளின் சேர்க்கையால் நாம் எப்படி எல்லாம் அலைக்கழிக்கப் படுகின்றோம். பாருங்கள்! இப்படி அலைகிற நம்மைப் பார்த்து ஆண்டவனே குருவாக வந்து "நீ நல்ல ஞானம உடையவன். சகவாசத்தால் கெட்டுப்போனாய்; திருநதி நடநது கொள்; உன்னுடைய பெருமை மிக உயர்ந்தது" என்று உணர்த்தியவுடன் சிவஞானம் பெற்ற செம்மலாக ஆகிவிடுகிறோம். இந்த நிலையை அறிவிக்கும் சூத்திரத்தைப் பாருங்கள்.

"ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தவிட்டு
அந்நியம் இன்மையின் அரன்கழல் செலுமே"

இது முதல் நூல். அப்படியே விரிவுரை மாதிரியாக சித்தியார் சொல்லுகிறது; அதனையும் பாருங்கள்.

"மன்னவன்தன் மகன் வேடரிடத்தே தங்கி
வளர்(ந்து) அவனை அறியாது மயங்கி நிற்பப்
பின்னவனும் என் மகன்நீ என்றவரிற் பிரித்துப்
பெருமையொடும் தானாக்கிப் பேணுமாபோல
துன்னிய ஐம்புலவேடர் சுழலிற் பட்டுத்
துணைவனையும் அறியாது துயருறும் தொல் உயிரை
மன்னும் அருட்குருவாகி வந்(து) அவரின் நீக்கி
மலம் அகற்றித் தானாக்கி மலரடிக்கீழ் வைப்பன்"

இப்படித் தோத்திர சாத்திரங்களால் திருவடியின் மூழுத் தன்மை பேசப்படுகின்றன. அடியார்களாகிய நீங்களும் குருஞான சம்பந்தர் அருள்பெற்றநாமும் கலந்த இந்த நிலையை எண்ணும்போது நமது சேக்கிழார் பெருமான் சொன்னது ஞாபகம் வருகிறது.

தமிழிலே வேதங்களைச் சொன்ன திருஞான சம்பந்தப்பெருமான் எழுந்தருளியிருக்கின்ற சீகாழித் திருப்பதிக்குப் பக்கத்திலே திருநாவுக்கரசர் வருகிறார். ஞானசம்பந்தப் பெருமான் எதிர்கொண்டழைக்கின்றார். திருநாவுக்கரசர் எப்படிப் பட்டவர்? சிவபெருமானே லேயே சூலை நோய் கொடுத்து ஆண்டருளப்பெற்றவர். சேக்கிழார் சொல்வதையும் பாருங்கள்.

> **நீண்டவரை வில்லியார்** வெஞ்சூலை மடுத்தருளி நேரேமுன்னாள்
> ஆண்ட அரசு எழுந்தருளக் கேட்டருளி ஆளுடைய பிள்ளையாரும்
> காண்டகைய பெருவிருப்புக் கைம்மிக்க திருவுள்ளக்கருத்தினோடும்
> மூண்ட அருள் மனத்தன்பர்புடைசூழ எழுந்தருளி முன்னே வந்தார்.

'நீண்டவரை வில்லியார்' எனக் குறிப்பிடுவதைச் சிந்தியுங்கள். வில் நீண்டு இருந்தாலும் கொலைக்குரிய காலத்தில் வளையும். இறைவனும் அறக்கருணைகாட்டி ஆட்கொள்ளுவாரானாலும் குற்றங்கண்ட இடத்து மறக் கருணை காட்டியும் தடுத்தாட்கொள்வார் என்ற நயத்தை அமைத்திருக்கின்றார்.

இனி, திருஞானசம்பந்தப் பெருமானை எடுத்துக் கொள்வோம். அவர் எப்படிப்பட்டவர்? சிவபெருமானின் திருவருளாலே அம்பிகைமுலைப்பாலோடு கிண்ணத்தில் ஞானங்குழைத்து ஊட்ட அமுது செய்தாராம். அதிலே ஒரு சொற்றொடரில் நமது சிந்தனையை இழுத்துச் செல்லுகிறார் சேக்கிழார். 'பெருகு ஞான வள்ளலார்' என்று. வளர் ஞானத்திற்கு எல்லை இல்லை. வளர்ந்த

ஞானத்திற்கு எல்லை உண்டு; வளர்கின்ற ஞானத்திற்கும் உண்டு. ஆனால் வளரும் ஞானத்திற்கு முன்னும் இல்லை; பின்னும் இல்லை. இந்தநிலையிலே அமுது செய்த பிள்ளையார் எதிர்கொண்டு அழைகக வருகிறார்.

அம்பிகைசெம் பொற்கிண்ணத் தமுதஞா
னங்கொடுப்ப அழுகை தீர்ந்த
செம்பவள வாய்ப்பிள்ளை திருநாவுக்
கரசரெனச் சிறந்த சீர்த்தி
எம்பெருமக்களும் இயைந்த கூட்டத்தில்
அரனடியார இன்பம எயதி
உம்பாகளும் போற்றிசைப்பச சிவம்பெருகும்
ஒலிநிறைநதாா உலகம் எலலாம்

இப்படி எதிர்கொண்ட காலத்து திருஞானசம்பந்தப் பெருமானுக்கு அப்பரைக் காண வேண்டும் என்ற ஆசை எல்லைகடந்து போயிற்றும். அப்போது சிவனடியார் திருக்கூட்டம் புடைசூழ, எதிர் கொண்டு அழைக்க முன்னே வருகிறார். அந்த நிலையைத் தான் உங்களுடைய வரவேற்பு இன்று நமககு நினைவூட்டுகிறது. ஒரு குருஞானசம்பந்தர் அருள்பெற்ற மகாசந்நிதானம் வருகிறார். இன்று சிவனடியார் திருக்கூட்டங்கள் எதிர்கொண்டு அழைககின்றன. அன்று ஞானசம்பந்தரின் திருக்கூட்டமும் சிவனடியார்திருக்கூட்டமும் கலந்த கலப்பு, கடலும் கடலும் சேர்ந்தது போலத்தான். கடலும் கடலும் சேர்ந்தால் வித்தியாசம் தெரியுமா? அப்படியே சேக்கிழார் செய்யுள்தாரத்தையும் நோககுங்கள். இரண்டு கடலும் ஒன்று சேர்ந்ததாம். ஒன்று அருட்கடல்; ஒன்று அன்புக்கடல். இந்த இரண்டு கடலும் சேர்ந்த நிலை, நமது இரண்டு அடியார் கூட்டங்களும் சேர்ந்த நிலை, இதை அப்படியே 'அருட் பெருகு தனிக்கடலும அன்புசெறி கடலும் ஆம்' என்று. எவ்வளவு அழகாகச் சிந்தைநிறையச் சொல்லுகிறார் பாருங்கள் சேககிழார். நீங்கள் குருஞானசமபந்தத்தைவரவேற்றீர்கள். உங்களுடைய அன்பு வெள்ளத்

திலே அது திளைத்தது. அதற்குக் கைம்மாறு என்ன? அருள்வெள்ளம் பெற்றீர்கள். இந்த நிலையை அப்படியே வைத்து ஒரு ஞான அநுபூதிச் செல்வர் பாடுவதைப் பாருங்கள்.

தந்ததுன் தன்னைக் கொண்டதென் தன்னைச்
சங்கரா! ஆர்கொலோ சதுரர்
அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாது நீ பெற்றதொன் றென்பால்
சிந்தையே கோயில் கொண்டஎம் பெருமான்
திருப்பெருந் துறையுறை சிவனே
எந்தையே ஈசா உடலிடங் கொண்டாய்
யான் இதற்கிலன் ஓர் கைம்மாறே.

சிவனடியார் திருக்கூட்டத்துப் பெருமக்களாகிய உங்களுக்கு நான் செய்யக்கூடியது யாது? ஆலவாயரனுடைய அருட்பெருக்கம் உங்கள் அனைவருக்கும் உண்டாகுக, எப்பொழுதும் சிவசிந்தனை நீங்காது விளங்குவீர்களாக என்றுசொல்லி அமைகின்றேன்.

"ஞானசம்பந்தம்"

அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளிவருவது. சைவசமயச் சார்பாக எழுதப்படும் தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவ சமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையாவது.

ஆண்டுக் கையொப்பம் ரூ. 1—8—0.

செயலாளர்,
"ஞானசம்பந்தம்" காரியாலயம்
தருமபுரம், மாயூரம் P. O.

குடந்தை நகராண்மைக் கழக மன்றத்தில்

நிகழ்ந்த வரவேற்புக்கு

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் ஆசியுரை.

13—8—51.

அன்பர்களே !

இன்று ஒரு பெரிய வெள்ளத்திலே நானும் இனைத்திருக்கிறேன்; நான் ஒருவன; நீங்கள் ஒருலக்ஷம மக்கள்; ஒரு லக்ஷமமககள் இங்குக கூடி இருக்கின்றூர்களா எனபீர்கள். லக்ஷம மககளிலே எததனைபேர் இங்கு வந்தாலும் அவர்கள் ஒவ்வொருவரு ம லட்சமமககள் தான். ஒரு சந்நிதானம் இந்தஊர் மங்களாம்பிகை ஆதி கும்பேஸ்வரரைத் தரிசிகக வந்திருககிறூர்கள். பாகுபாடின்றி எல்லோரும ஏகோபித்த முறையிலே நீங்கள் அளித்த வரவேற்பு எங்கள் ஸ்ரீ குருஞானசம்பந்தப் பெருமானுக்கு அளித்த வரவேற்பு; எனககு அளித்த வரவேற்பு ஆகாது.

ஞானியர்களின் திருவருள் இல்லையானல் உலகம் இயங்காது. ஆண்டவனைப்பற்றிய எண்ணம் நம் ஒவ்வொருவர் உள்ளத்திலும் எழ வேண்டும். நமக்குப் பெருங்கருணைத் தடங்கடலாகிய கடவுளிடத்திலே அன்பு வேண்டும். அப்படி அன்போடு எழுந்த சொல்தான் இனறு தோத்திரமாக உளளது. பனனிருதிருமுறையாக உள்ளது. அனபு ஒருவரையொருவர் பார்தத மாத்திரத்தில வெளிப்பட்டுவிடும. ‘அடுத்தது காட்டும் பளிங்கு போல், நெஞ்சம கடுததது காட்டும முகம’ என்றூர் ஒரு தமிழறிஞர். பாரதியார் வளளுவனைப்போல், கம்பனைப் போல, இளஙகோவைப்போல எனறு பாடினரே அப்பொழுது அந்த ஆசிரிய மகனுடைய உள்ளத்திலே பாகுபாட்டுணர்சசி எழுந்திருககுமா? அதுபோல நம் ஒவ்வொருவர் உள்ளததிலும ஒறறுமை உணர்ச்சி எழ

குடந்தை நகராண்மைக்கழக மன்றத்தில்

நகரமன்றத்தலைவர் வரவேற்பு நன்மலர் வாசித்தல்.

குடந்தை நகராண்மைக்கழக மன்றத்தில்

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமும் நகராண்மைக்கழக உறுப்பினர்களும்

குடந்தை நகராண்மைக்கழக மன்றத்தில்



நகரமன்றத்தலைவர், திரு. இரத்தினசபாபதிச்செட்டியார் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்துதல்

வேண்டும்; மனம் பளிங்கு போல் இருக்கவேண்டும். ஏன்? நம்முடைய இறைவன் பால்வண்ணனல்லவா? "வெள்ளைக்கு இல்லை கள்ளச்சிந்தை" என்பது பழமொழி.

பெரியார்கள் எல்லாம "யாதொருசமயம் கொண்டீர் அத் தெய்வமாகி ஆண்டவன் வருவன்'' என்றார்கள். அன்பின் வடிவம் ஆண்டவன் எனறு சொன்னார்கள். ஏன் சொன்னார்கள்? அவர்கள் உண்மைப் பொருள் எதுவோ அதைப் பாடினார்கள். ஒரு நலல நிலைமைககு அற நெறியிலே வரவேண்டுமானல-மக்கள் அனைவரும மனிதர்களாக வாழவேண்டுமானல அவர்களுககு இனறியமையாததாக அவசியமாக வேண்டியது எது? கடவுள் நம்பிககை அதைத்தான நான் உங்களுககுச் சொலல வந்தேன. கடவுள நமபிக்கை வேணடும. அப்படி இலலாது இயற்கையே கடவுள; கடவுள் வேறு இல்லை என்று ஒரு பகுத்தறிவு ஆராய்ச்சி இப்பொழுது உலகத்தில் எழுகின்றதே. அவவெண்ணம உள்ளத்தில தோன்றககூடாது. உலகம இயற்கை அலல; அது செயற்கை. உலகத்திலே உள்ளது இரண்டுதானே! லைட்டு பிரகாசமாய் இருககிறது எதனல்? நெகட்டிவ், பாசிடிவ சேர்ந்ததினல. இநத இரண்டும இலலையானல் பிரகாசம எது? இது ஒரு பெரிய நுணுககமான கருத்தல்லவா!

"அம்மையோடு அப்பனுகிச் செறிவொழியாது நின்ற சிவன்'' எனறார்கள் பெரியோர்கள். அமமையும் அப்பனும ஒன்றுபட்டிருககவேண்டும். அமமையினறி அப்பனும், அப்பனின்றி அம்மையும பிரிந்திருப்பார்களானல் உலக இயககம் ஏது? வரலாறு கேள்விப் பட்டிருப்பீர்கள். அப்பன் யோகத்தில் அமர்ந்து விட்டான்; அமமை தனிததனள். உயிர்கள் தொழிற் பாடின்றி அசைவின்றி அப்படியே கிடந்தன. தேவர்கள் திகைத்தார்கள். திகைத்து என்னசெய்தார்கள; மன்மதனை அழைத்து அப்பனிடம செல்லச்

சொன்னார்கள். அப்பன் அம்மையோடு சேர்ந்தான். அவ்வளவுதான். உயிர்களுக்குப் பேரின்பம்.

"கண்ணுதல் யோகிருப்ப காமன்கினறிட வேட்கைகரு
விணணுறு தேவராதி மெலிந்தமை ஓரார மாலதான்
எண்ணிவேள் மதனைஎவ எரிவிழித்து இமவான்பெற்ற
பெண்ணினைப் புணர்ந்து உயிரகருப் பேரின்பம அளித்ததோரார."

கடவுளிடத்திலே பக்தி ஏன் வேண்டும்? அவசியந் தானு என்று கேட்கலாம். மனிதனுக்குப் பொறுப்பு எத்தனை இருக்கிறது? ஒரு சிறந்த கிடைத்தற்கரிய பெரியதோர் பொறுப்பு. மணிமேகலையிலே 'பிறந்தார் உறுவது பெருகிய துன்பம், பிறவார் உறுவது பெரும் பேரின்பம்' என்று சொல்லுகிறது. ஆனல் நமது அப்பர் அடிகளோ பிறப்புவேண்டும் என்று சொலகிறார். என்ன நேர்விரோதம் பாருங்கள். ஏன் அப்பர் அடிகள் பிறப்பு வேண்டும் என்று சொன்னார் தெரியுமா; இறைவன் திருவுருவத்தைத் தரிசிககவே.

"குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமிணசிரிப்பும்
பனித்த சடையும பவளமபோல் மேனியில் பால்வெண்ணீறும்
இனித்தமுடைய எடுதத பொறபாதமும் காணப்பெற்றால்
மனிதப் பிறவியும் வேண்டுவதே இநத மாநிலததே."

காணப் பெற்றால்தான் மனிதப்பிறவி வேண்டும் என்கிறார். சுந்தரமூர்த்தி நாயனரை அழகாகக்குறிப்பிடு கின்றார் சேககிழார் பெருமான். காலங்கடந்துவிட்டது. அன்பர்களே! அவர் இயறகையாக ஆண்டவனை அருச் சனை செய்யவேண்டிய மரபில் தோன்றியவர். 'மாதொரு பாகனர்க்கு வழிவழி அடிமை செய்யும வேதியர் குலம்' என்கிறார் சேககிழார் அந்தநிலை நன்கு நிரம்பியவர்கள். தோத்திரங்கள் சொல்ல இறைவனே அவருக்கு அடி யெடுத்துக கொடுககின்றார்; சொல்லச் செய்கின்றார்; பாடலைப் பாருங்கள். 'அர்ச்சனை பாட்டேயாகுமாதலால்

மண்மேல் சொற்றமிழ் பாடுகென்றார் நூமறைபாடும் வாயார் என்பது. வானத்திலிருந்து உலகத்தை இயக் கக்கூடிய இறைவன் 'சொற்றமிழ பாடுக' என்றார். ஆன திைலே பரம்பொருளிடத்திலேயிருந்து எழுந்த தமிழை நாம் புறககணிககக் கூடாது. தோத்திரத்தை நீங்கள் படிக்கவேண்டும; ஆழ்வார் பிரபந்தத்தைப் படிக்க வேண்டும். அப்படிப் படித்தால் பலன் கிடைக்குமா? கிடைக்கும. ஞானசம்பந்தர் சொல்கிறார் 'சமபந்தன் மொழி பத்தும் இவைவல்லார் பொன்னடைந்தார் போகங்கள் பல அடைந்தார் புண்ணியரே' திருஞான சம்பந்தருடைய பத்துச் செய்யுளை யார் பாடுகிறார்களோ அவர்கள் பொன்னடைந்தார், போகங்கள் அடைந்தார், அவர்தான் புண்ணியர். ஆகவே தோத்திரம் இசை யோடு வருகிறதோ இல்லையோ அதைப்பற்றிக் கவலை யில்லை. பாடினல் பலன் இருககிறது என்ன பலன் கிடைககும. பொருள வேண்டுமா ! பொருள்கள் எல் லாம வரும். 'பொன்னும் மெய்ப்பொருளும் தருவானை' எனகிறார் சுந்தரர். ஆகையினல் இறைவனிடத்திலே அன்பு அவசியமாக இருக்கவேண்டும் என்பதற்காகவே நான் தோத்திரத்தைப்பற்றிச் சொன்னேன். சாத் திரத்தைப் பற்றிச் சொன்னேன்.

ஈசனுககு அன்பு வேண்டும் என்றாரே; ஏன் ? கடவு ளிடத்து அன்பிருந்தால்தான மக்களுக்குத் தொண்டு செய்யமுடியும. தெருவிலே குழாய் வைக்கவேண்டுமா? படிகக பள்ளிககூடஙகள் வேண்டுமா? குளம் வேண்டுமா? லைட்டு வேண்டுமா? சாககடை வசதி வேண்டுமா? என்று இவைகளைக கவனித்துச் செய்ய அன்பு இருந்தால் தானே முடியும்.

ஆண்டவனிடத்திலே அன்பு இருந்தால் இப்போது உணவுப் பஞ்சம், உடைப் பஞ்சம என்ற சொல்லே எழாது. அடுத்தாற்போலச் சொல்லுகிறேன். மக்கள்

ஒவ்வொருவரும் முயற்சி உடையவர்களாக இருக்க வேண்டும. 'ஊக்கமது கைவிடேல்' என்றபடி நல்ல முறையிலே உழைத்துச் சம்பாதிககப்பட்ட அந்த ஊதியத்தைககொணடு அறநெறியிலே வாழவேண்டும. அறத்திறகு மாருக இருத்தல்கூடாது. அதற்காகத்தான் ஆண்டவனிடத்திலே அன்பு வேண்டும என்று சொல்லுகிருர். ஈசனிடத்திலே அன்பிலார் எவ்வுயிருக்கும் அன்பிலார். எவர்கும் அன்பிலார். அது மட்டுமா? தமகும் அன்பிலார். அந்த முறையிலே அன்பு அவசியமாக வேண்டும். அதைத்தான் நான் உங்களுககுச் சொல்ல முன வந்தேன்.

ஒரு சந்நிதானம அவர்களை நீங்கள் எல்லாம் கூடி வரவேற்றீர்கள். ஏன் அன்புதானே காரணம். அப்படியிருகக நம்மையும் உங்களையும் படைத்த இறைவனிடத்திலே ஏன் அன்பு செலுத்தககூடாது? இந்த நிலையைத் தான மனம உணரவேண்டும்; உணர்ந்து செய்ய வேண்டும.

மதப்பிரசாரம் வேணடும்; மத நம்பிககை வேண்டும் சமயநம்பிக்கை வேண்டும். ஏன்? ஒழுக்கங்கள் தான் சமயநம்பிககை. அது இல்லாவிட்டால மனிதன் மனிதனுக வாழ முடியாது. இது நிச்சயம. அப்படி வாழ்வோமானுல சிவஞானச் செமமலாகலாம். அப்படி வாழ்வதறகு வழி வகுப்பதுதான் நமது சாத்திரங்கள், தோத்திரங்கள் எல்லாம.

ஒரு நண்பர் இருககிருர். ஒரு நாள் மாலையில் நாம் கோவிலுக்குப் போகத் தயாராக இருக்கிறேம். அப்பொழுது அந்த நண்பர் நமமைப் பார்த்துவிடுகிருர். "என்ன அய்யா, கோவிலுககா போகிறீர்கள்? வாருங்கள் சினிமாவுககுப் போகலாம" என்று சொல்லி அழைத்துப்போய்விடுகிருர். இதைத்தான கீழ் நோககு வது அதாவது தீயநெறியில் செல்வது; மேல் நோக்கு

வது அதாவது நல்லவழியிற் செலவது என்று கூறப் படும். நல்லாரைககாண்பதுவும் நன்றே, நலமிகக நல்லார் சொலகேட்பதுவும் நன்றே, நல்லாரோடு இணங்கி இருப் பதுவும நன்று என்று அவ்வையார் அழகாகச் சொல்லு கிறார். அந்த முறையிலே சொல்லுகிறேன்.

அன்பு கடவுளிடத்தில் செலுத்தப்பட வேண்டியது அவசியம என்று சொன்னேம். அககடவுளைப்பற்றி அப்பரடிகள் சொல்வதைப்பாருங்கள். என்னசொல்லு கிறார்? ஆன்மாககளைத் தடைப்படுத்துவது பாசம் அலலவா? அதனை முதலில் நீக்குவார். எப்படி? இருந்த இடமும் தெரியாதபடிப் போககிவிடுவார். இதனைக் 'களைவார்' என்ற ஒரு சொல்லால் குறிக்கும் அழகைப் பாருங்கள். பயிருக்குக களை பிடுங்குதல் எனபது உலக வழககல்லவா? அவ்வாறு பாசத்தினை அடியோடு நீககிய பிறகு ஆன்மாககளுககு அமுதம்போல விளங்குவார். அது மட்டுமா? ஆசை தீருமபடி வேண்டிய அளவு எலலா வற்றையும கொடுப்பார். அழியாத பரமபொருளால் கொடுககப்படும பொருளும் அழியாமலதானே இருகக வேணடும. அவ்வாறு அழியாப்பொருளைக கொடுப்பவர் கொடுககவரும்பொழுது எந்தவடிவங்கொண்டு வருவார்? திருநீலகண்டத்துடனே வருவார். திருநீலகண்டத்துககு ஓர் அழகான உவமையைத் தேர்நதெடுதது்க் கூறு கிறார் பாருங்கள். என்ன உவமை? அதுதான் காயா மலர். காயாமலர் நிறமும் விடமதங்கிய இறைவன் திருமிடற்றின் நிறமும் ஒன்றுதானே. இத்தகைய இறைவர் தனித்துவருவாரா! இடபத்தின்மீது ஏறிக் கொண்டுதான் வருவார். அவர் எங்கு இருப்பார்? திருக் கடவூர் மயானத்தில இருப்பார். பாடலைப் பார்ப்போம்.

"பாசமான களைவார் பரிவார்க்கு அமுதம அனையார்
ஆசைதீரக் கொடுப்பார் அலங்கல் விடைமேல் வருவார்
காசைமலர்போல் மிடற்றார் கடவூர்மயானம் அமர்ந்தார்
பேச வருவார் ஒருவர் அவர் எமபெருமான் அடிகளே."

இன்னும் பாருங்கள். இறைவனைச் சிந்திப்பது அருமைதான்; முடியாத காரியந்தான்; அதுமட்டுமா? எவ்வளவோ இடையூறுகளுமவரும். இவற்றையெல்லாம் ஒதுககித்தளளிச் சிநதித்துவிட்டால் சிநதிக்கப்பெற்ற திருவடி எனனகொடுககும? தேனை - செந்தேனைப் பொழியும. அத்துடன் முத்தியையும கொடுத்தருளும; நமபழவினை இருககினறதே. அது நமமை எப்பொழுதும விடாது சேர்நதிருககும. அதையுங்கூடத தீர்த துவிடும. எது? 'ஐபாறன் அடித்தலமே.' சீககிரம முடித்துக கொள்கிறேன். நேரமும் அதிகமாகி விடடது.

அனல் நீங்கள் எல்லாம அறிவு மிக உள்ளவர்கள் இந்த நகரசபை உங்கள் உள்ளத்திலே யாரைத் தேர்நதெடுககலாம என்று தோன்றியிருககும? நலல வரைத்தானே தேர்நதெடுப்பீர்கள; அப்படியே இந்த சபைககுத் தலைவரைத் தேர்நதெடுத்துவிடடீர்கள்; அந்த முறையிலே நமது செட்டியார் இரத்தினம; இரத்தினம் வீட்டில் இலலை, சபையில. இருககவேண்டிய இடம அது தானே. இரத்தினசபாபதியைப் பாருங்கள். சபைககுப் பதி இரத்தினம தானே. அதோடு அவர்களிடத்திலே உயர்ந்த குணம.

'எல்லார்ககும நன்றும் பணிதல் அவருள்ளும் செல்வர்ககே செலவம் தகைத்து' என்ற சொலலுககு இயைந்த ஒருவரைப் பார்கக வேண்டுமானல் நமது சபாபதி அவர்களைத்தான் பார்ககலாம. இது யாரும மறுகக முடியாத விஷயமதானே. அவர்களுககு அடுததாற்போல இராமலிங்கம் 'சிவம என்னும் ஓசை அல்லது அறையோ' என்றூர் அப்பரடிகள். அது போலவே இந்தக குடந்தையிலே எங்கு பார்த்தாலும் செந்தமிழ் ஓசைதான்; சிவமணந்தான்; ஏன்? அவர் தமிழில் அளவுகடந்த அன்பு உள்ளவர். எந்த நகரில் இருந்தாலும ஆங்காங்கும் சிவமணம் கமழச்செய்வது

தான் அவரது முதற்பணி. அந்த முறையிலே இராம லிங்கததையும தேர்ந்தெடுத்து விட்டார்கள்.

நமக்கு வரவேற்பு கொடுத்த செட்டியார் அவர்கள் சைவத்தைப்பற்றிப் பேசத் தொடஙகிவிட்டார்கள். ஆகவே இந்த சபாபதி அவர்களை நீங்கள் இந்த நகர சபைத்தலைவராக மட்டும் வைத்துவிடாமல் அவர்கள் இன்னும் சிறந்தபதவியில் இருககக வேண்டும் என்று எண்ணவேண்டும. இந்த மாதிரி ஒரு தலைவர் உங்க ளுககுக கிடைப்பது அரிது. உண்மை எதுவோ அதைத் தான் சொல்லுகிறேன்.

இந்தக் கூட்டத்திலே உங்களுக்கு நான் என்ன கைம்மாறு செய்ய வநதேன்? என்றால் என்ன கைமமாறு செய்யமுடியும? ஆனால் ஒன்று சொல்லுகிறேன். உங்கள் எலலோருககும் நமது செந்தமிழச்சொககர் திருவருள் என்றும நின்று நிலவுவதாக என்று. இநத அளவிலே நிறுத்திக கொள்ளுகிறேன். அடுத்தாறபோல என்ன நிகழ்சசி இருககிறது? 'பிறந்த பயன்பெற வா' என்று கும்பேஸ்வரர் அழைககிறார். அங்கு எல்லோரும் வர வேணடும. ஏன? இந்த சபை அழியும். இந்த உலகம் அழியும. ஆனால் ஆணடவனிடத்திலே வைத்த அன்பு அழியாது.

சேர, சோழ, பாண்டியர் மூவர் முன்பு ஆண்டனர். அதிலே சேரமான் ஒருவர் சொல்லுகிறார். 'உலகியலும் அரசியலும் உறுதி அல்ல என்று.' அவ்வாறு உணர்ந்த அவர் என்ன செய்தார். திருநந்தவனம சென்று மலர் பறித்து இறைவனுக்குச் சாததினார். ஒரு அரசராவது இம்மாதிரி செய்யவாவது என்றெலலாம நமக்குக் தோன்றலாம. ஏன்? பகுத்தறிவுவாதிகள் அல்லவா. இப்பொழுது இங்கு நலல மழை பெய்ததே. இது மாதிரி மழைபெய்தது அந்நாளில் ஒருநாள். வண்ணான்

ஒருவன் உவர்மண் தூக்கி மழையில் நனைந்து பின் வெய்யிலில் அது உலரவே வெளுத்தமேனியனாக வரு கின்றான். பவனிசெல்கின்ற அரசன் பார்த்தான். உடனே என்ன செய்தான்? இறங்கினான் யானையி னின்று; வண்ணானை வணங்கினான். உடனே அவன் 'சாமி! நான் யார்? வண்ணான்தானே; என்னை ஏன் வணங்குகின்றீர்கள்' என்றான். வணங்கிய சேரமான் ஒரு சக்ரவர்த்தி வண்ணானுக்கு என்ன பதில் சொல்லு கிறார் பாருங்கள். 'அரசபாரம் ஏற்று அரசாளுதல் திருத்தொண்டு செய்வதற்கு இடையூறாக இருக்குமே; ஆனால் நாம் ஏன் இதை ஏற்கவேண்டும் ஏன் ஏற்றுக் கொண்டோம். ஏற்றுகொள்வதற்கும் அவனருள்தானே காரணம். அவனருள் இதை ஏற்றுக்கொள்ளச் செய்தது. ஏற்றுக்கொண்ட பிறகு அந்த அரசபோகத் திலே திளைத்து இறையுணர்வை மறந்துவிடலாமா? மறத்தல் கூடாதே; மறவாமைக்கு இவனது திருமேனிக் காட்சியும் ஒன்றல்லவா! என்றவாறெல்லாம் எண்ணிய வராய் 'அடிச்சேரன் அடியேன்; திருநீற்றின் வாரவேடம் நினைப்பித்தீர்; வருந்தாதேகும்' என்று கூறுகிறார்.

இவ்வளவு அழகான உள்ளமுடையோர் எந்தப் பொருளைப் பார்த்தாலும் சிவமாகக் காணுவார்களே யல்லாது வேறு ஒன்றுமே காணமாட்டார்கள். எதைப் பார்த்தாலும் பரமபொருள் நினைவு. இது ஒரு தனிநிலை. அன்பின் முதிர்ச்சியினால்தான் இந்த நிலையை அடைய லாம். ஆகவே ஒவ்வொருவரும் யாரிடத்திலும் அன் புடையவர்களாக இருத்தல் வேண்டும். எல்லாம் வல்ல சொக்கலிங்கப் பெருமான் திருவருளால் எல்லா நலனை யும் நீங்கள் அடையவேண்டும் என்று சொல்லி இத் துடன் அமைகின்றேன்.

குடந்தை ராமவிலாசத்தில்

திரு. ஆரோக்கியசாமிப்பிள்ளை பூர்ணகும்பத்துடன் வரவேற்கிறார்.

குடந்தை ராமவிலாசத்தில்

ராமவிலாஸ் பஸ்தொழிலாளர் கூட்டத்தில் வரவேற்பு.

தருமபுர ஆதீன மடாலயத்தில்

ஆவணி மூலத் திருநாள்

மதுரைமாநகரில் குதிரை மாறியும், விண்புகழ் முடிமிசை மண்பொறை சுமந்தும், நீற்றெழில் மேனியில் மாற்றடிபட்டும் மணிவாசகப்பெருமானை ஆட்கொண்ட ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமானுக்கு உகந்ததிருநாள் மூலத்திருநாள். அந்த மூலத் திருநாள் ஆண்டுக்கு ஒருநாள். அந்த ஒருநாளும் ஆதீனத்திற்குப் பெருநாள். அந்தப் பெருநாள் மிகச் சிறப்பாக 9—9—51 ஞாயிறன்று கொண்டாடப்பெற்றது இத் திருநாளில் இவ்வாண்டு சிறப்பாகக் குறிக்கத்தக்க நிகழ்ச்சி திருக்குறள் உரை வளம்-பொருட்பால்-வெளியீடு. அத்துடன் வழக்கம்போல் ஆதீனப் பல்கலைக்கல்லூரி முதலிய கல்வி நிலையங்களின் ஆண்டு விழாவும் அன்று கொண்டாடப்பெற்றது. நகரெங்கும் தூய்மை. எங்குபார்த்தாலும் மகரதோரணங்கள். தலைவர்களை-புலவர்களை வரவேற்கும் வளைவுத்தட்டிகள். ஆதீன மடாலயத்தினுள் வந்தால் ஸ்ரீசொக்கலிங்கப்பெருமான் பூஜைமடத்தில் அலங்காரச் சிறப்பு ஒரு தனியழகு. அதுபோலவேதான் ஆதீன மடாலய முகப்பில் வெளியீட்டுவிழாவைபவத்திற்கு அமைக்கப்பெற்ற மேடை முதலியனவும் அலங்காரம் செய்யப்பெற்றிருந்தன. மின்விளக்குகளும், மின் விசிறிகளும் பொருத்தப்பட்டிருந்தன,

காலை 10 மணிக்கு ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் பூஜைக்கு எழுந்தருளினார்கள். பெருமானுக்கு அபிஷேக ஆராதனைகள் மிகச் சிறப்பாக நடைபெற்றன. அன்பர்கள் அனைவரும் கண்டுகளித்தனர். இறைவழிபாடும் குருவழிபாடும் ஒருசேர நிகழ்த்தினர். ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களிடம் அருள்திருநீறுபெற்று அணிந்துகொண்டனர். மணி 12க்கு மாகேசுவர பூஜையும் நடந்தேறியது.

மாலை 4 மணி, நிகழ்ச்சியிற் குறிப்பிட்டபடி வெளியீட்டு விழாவைபவம் தொடங்கிற்று. ஆதீனத் தேவாரபாடசாலை மாணவர்கள் கடவுள்வாழ்த்துப் பாடினார்கள். கோவை. உயர் திருவாளர். டாக்டர். ஆர். கே. சண்முகம்செட்டியார் அவர்கள் விழாத்தலைமையை அன்புடன் ஏற்று விழாவைத் தொடங்கி வைத்தார்கள். தலைவா அவர்களுக்கு ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் ஆசியுரை வழங்கினார்கள். கல்லூரிப் பேராசிரியர், வித்துவான் V. S. குருசாமி அவாகளால் தலைவர் அவர்களுக்கு வரவேற்புரை ஒன்று வாசித்தளிக்கப்பெற்றது.

பிறகு ஆதீனப் பல்கலைக்கல்லூரி ஆண்டு அறிக்கையினைக் கல்லூரித்தலைவர் ஸ்ரீ Y. மகாலிங்கசாஸ்திரிகள், M.A., B. L அவர்கள் வாசித்தார்கள். ஆதீன வேதசிவாகமபாடசாலை ஆண்டு அறிக்கையை பாடசாலை சிவாகம ஆசிரியர் சிவஸ்ரீ S. சுவாமிநாத சிவாசாரியார் அவர்களும், ஆதீனத் தேவார பாடசாலை ஆண்டு அறிக்கையை பாடசாலைத் தமிழாசிரியர், வித்துவான் திரு. B. நடராஜபிள்ளை அவாகளும, ஆதீன ஸ்ரீ குருஞானசமபநதர் ஆரமப உயர்தரப்பாடசாலை ஆண்டு அறிக்கையை அப்பாடசாலை கரஸ்பாண்டெண்டு ஸ்ரீ சௌநதிரராஜ அயயங்கார் அவர்களும படித்தார்கள். கல்லூரிப் பேராசியர் திரு. ச தண்டபாணி தேசிகரவர்களால், விழாவில் கலந்து கொள்வதற்கு இயலாத அன்பர்கள் அனுப்பிய மகிழ்ச்சிச் செய்திகள் படிக்கப்பெற்றன.

அடுத்த நிகழ்சசி பட்டம் வழங்கல். ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் புலவர்களின் புலமையறிந்து போற்றும் உயர் குணம் படைத்தவர்கள். எப்போதுமே புலவர்களிடத்தில் அளவளாவி இன்பமுறுதலில் அவர்களுக்குத் தனிவிருப்பம் உண்டு. ஆகவே அவர்கள் சென்னைப்பல்கலைக்கழகத்துத் தமிழ்ப் பேராசிரியர் உயர்திருவாளர் ரா. பி. சேதுப்பிள்ளை B.A.B.L. அவர்களுக்குச 'சொல்லின் செல்வன்' என்னும் பட்டம் வழங்கிப் பொன்னாடை போர்த்து, பட்டம் பொறித்த பதக்கத்தையும் அளித்து ஆசிவழங்கினார்கள். கண்டுகளித்த அன்பர்கள் ஆனந்தத்தில் திளைத்தார்கள். ஆதீனக் கல்விநிலையமாணவர்கள் சார்பில், ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவாகள் தகுதி அறிந்து

தக்க இடத்தில் தக்க முறையில் புலவரைப்போற்றி அருளும் குணநலத்தையும, பட்டம்பெற்ற அறிஞரின் அரும்புலமையினையும் பாராட்டும் வாயிலாக ஓர் பாராட்டுரை ஆதீனக்கல்லூரி வித்துவான் வகுப்பு மாணவன் செ. சிங்காரவேலனால் படிக்கப் பெறறது.

பிறகு விழாத்தலைவரவர்கள் தமது முன்னுரையாக திருக்குறள் பொருட்பாலில் கண்ட அரசியல் பொருளாதார நுணுக்கங்களையும், வெளியிட்ட ஆதீனத்தின் சிறப்பையும் எடுத்து விளக்கினார்கள்.

அடுத்தபடியாக, தருமபுர ஆதீனஸ்தாபகர் ஸ்ரீலஸ்ரீ குரு ஞானசம்பந்த சுவாமிகள் குருபூஜைவிழா அணிமலராகிய திருக்குறள் உரைவள வெளியீட்டின் சிறப்பினை உரைவளத் தொகுபபாசிரியர் திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் எடுத்துமொழிந்தார்கள். சிறப்புசசொற்பொழிவாக, சொல்லின் செல்வன் திரு. ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள் 'நல்லரசு' என்பது பறறியும, ஆனந்தவிகடன் துணை ஆசிரியா உயர்திரு. பி. ஸ்ரீ ஆச்சார்யா அவர்கள் 'ஆனந்தக்கூத்து' என்பது பற்றியும விரிவுரை நிகழ்த்தினார்கள். தலைவர் அவர்களின் விருப்பத்துக்கிணங்க ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம அவர்கள் தலைவர்க்கும், பேசசாளர்கட்கும், கணடு கேட்ட பெருமக்கள் அனைவர்க்கும தமது ஆசியினை மீண்டும அருளினார்கள். கடவுள் வாழ்த்துடன் விழா இனிது முடிநதது. அனைவர்க்கும சந்தன தாமபூலங்கள் வழங்கப்பெற்றன!

இரவு ஏழுமணிக்கு ஸ்ரீ சொக்கலிங்கப்பெருமான் வழிபாடு நடைபெற்றது.

மணி 8½. ஆதீனககல்விநிலைய மாணவர்களால் சிலம்புச் செல்வம் என்ற நாடகம் காண்பார் களிப்புற நடததிக்காட்டப் பெற்றது. நாடகமுடிவில் திரு. ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள் மாணவர்களின் நடிப்புத்திறனைப் பாராட்டிப் பேசினார்கள்.

ஆவணிமூல விழாவில்

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள்

விழாத்தலைவர், உயர்திருவாளர்,

டாக்டர் R. K. சண்முகம்செட்டியார் அவர்களுக்கு

வழங்கிய ஆசியுரை.

இன்பம் இனிமை என்பன யாவருடைய பொறிக்கும் புலனுக்கும் விருப்பமானவை. பொறியளவில் இனிமையாயிருப்பது புலனில் இன்பமாகிறது. இன்பவிழைவே எழுச்சிக்கு ஏது. இன்ப எதிர்நோக்கில்லாத மனிதன் எழுச்சியும் மகிழ்ச்சியும் உடையவனாகான். அத்தகைய இனிமையும் இன்பமும் ஒருசேர இருப்பது இலக்கியத் தேனடையில். அந்த அடையிலிருந்து வண்டிற்கு ஊறு உண்டாகாதபடி, வண்டும் தன்கையைக் கடிக்காதபடி, தேனடையும் சிறிதும் சிதையாதபடி, தேனைக் கொள்பவனே சிறந்த வேடன். சிலப்பதிகாரத் தேனடையிலே சொல்லைச் சிதைககாமல் - புதிய கருத்துக்களைப் புகுத்தி இலக்கணப்பிழை என்கின்ற வண்டால் கடிபடாமல் செம்பொருளாகிய தேனைச் சுவைத்துச் சுவைத்து, சுவைக்கவும் வைத்த தங்களுடைய விரிவுரைப்புலமை தமிழுழவருக்குத் தக்கதோர் எடுத்துக்காட்டு.

'பொருளாட்சி போற்றாதார்க்கு இல்லை' என்பது வள்ளுவர் வாய்மொழி. போற்றுதல் இருந்தநிலையில் இருப்புப் பெட்டகத்து வைத்துப்போற்றுதலும், ஒன்றைப் பத்தாக்கி, பத்தை நூறாக்கித் தன்னளவில் போற்றுதலும், அங்ஙனம் ஆக்கி அனைவரும் பயன் கொள்ளப் போற்றுதலும் எனப் போற்றுதல் பல வகைத்து. பேரறிஞர் பேணுமமுறை மூன்றாவதே. அதனைத் தாங்களும் கையாண்டு இந்தியநாட்டு மக்களையும் கையாளச்செய்து உயர்த்தும் தங்களுடைய பொருளாதாரப் புலமையை நாட்டுமக்கள்நன்கு பயன்படுத்த

வேண்டும் என்பது நமது விருப்பம். உழைப்பார் பலர்க்கு, உணர்த்தும் ஒருவர் தேவை. செய்யும் கருவிகள் இரண்டிரண்டாக அமைந்துள்ளன. அவை களை இயக்கும் சிந்தனை ஒன்றேதான் அமைந்துள்ளது. அதுபோலத் தாங்கள் சிறந்த சிந்தனையாளராக அனைவருக்கும் ஆவனசெய்து, பொருளாதார நிலையில் தமிழகத்தையே உயர்த்துக என ஆசி வழங்குகிறோம்.

ஸர். விச்வேசுர ஐயா ஒருவர் கன்னடநாட்டைக் கைத்தொழில் நாடாகச் செய்துவருகிறார். அதுபோலத் தமிழ்நாட்டுச் செல்வநிலை தாழாது தங்களால் ஓங்குமாக. சிந்தனை முற்றிச் செயலாற்றுஞ்சத்தி தங்களுக்குச் சிறக்குமாக. ஆயுளும் இன்பமும் என்றும் சிறக்க, தாங்கள் சிவசிந்தனை மறவாது திகழ்வீர்களாக. தங்களைப்போன்ற அறிவாளிகட்கு ஆட்சிப்பீடம் இடம் தந்து ஏற்றம்பெறுமாக.

இவ்வண்ணம் தங்களுக்கு எல்லாநலனும் பெருக எம்முடைய ஆத்மார்த்தமூர்த்தியாகிய ஸ்ரீசொக்கலிங்கப் பெருமான் திருவருள்புரிவாராக.

வணக்கப்பாடல்

திரு. ச. கந்தசாமி அவர்கள் B. A.,
69-B, மார்சிங்பேட்டை ரோடு, திருச்சி.

தருமபுரச் சொக்கேசர் சங்கம்வீற் றிருந்த
பெருமை யுலகறிந்த தம்மா!—அருமைத்
திருக்குறளின் வான்பொருளைத் தேடி யுரைவளங்கள்
பெருக்கியின்று வைத்த பிறகு.

ஆதீனத் தமிழ்த்தொண்டு வெல்க.

ஆவணிமூல விழாவில

விழாத்தலைவர், உயர் திருவாளர்,

டாக்டர். R. K. சண்முகம்செட்டியார் அவர்களுக்கு

ஆதீனக் கல்வி நிலையத்தின் சார்பில்

அளித்த வரவேற்புரை.

கொங்குநாடு தந்த குரிசிலே! வருக!

தாங்கள் தந்த சிலப்பதிகாரவுரை கற்றார்க்கும் மற்றார்க்கும் மிகமிக இனிக்கிறது உண்டவர்க்கு நெஞ்சு உரமாகிறது. அதன் காரணம் என்ன என்பது எமது நெடுநாளைய ஆய்வு. இன்று உண்மையைக் கண்டோம். கொங்கில் தோய்ந்துக்கொடுத்த தமிழாயிருப்பதனாலே என்று உணர்ந்தோம். அதுமட்டுமல்ல; கணவனுக்கு மனைவியாகக் கடுகி வழிநடக்கின்ற கண்ணகி சாலினி யால 'கொங்கச்செல்வி; குடமலையாட்டி, தென்தமிழ்ப் பாவை, செய்தவக்கொழுந்து' என்று பாராட்டப்படு கிறாள். செய்தவம் மிகுந்த தென்தமிழ்ப் பாவையாய்ச் செல்லும் கண்ணகி தெய்வமாவாள் என்று குறிப்பிடப் பட்ட இடம் எங்கே? கொங்குநாட்டிலே. பத்தினிப் பெண்ணாகச் சென்ற கண்ணகி, பத்தினித் தெய்வமான கொங்குநாட்டிலேபண்பட்ட தமிழுரை யாவர்க்கும் இன்பம் பயவாமல் எவ்வாறு இருக்கமுடியும்! ஆதலால் அரும்பதவுரைகாரருக்குப் பின்னுல அடியார்க்குநல்லா ரைப்போல, அடியார்க்குநல்லார்க்குப் பின்பு, R. K. சண்முகமாகிய தங்களுக்கும் உரையாசிரியர்களின் பட்டியலில் ஓரிடம் தந்து உலகம் போற்றுகிறது.

பல்கலை பயின்ற நல்வித்தக! வருக!

'திறமான புலமையெனில் வெளிநாட்டார் அதைப் போற்றல வேண்டும்' என்றார் நம்மிடையே வாழ்ந்த

அமரகவி. அதற்கு எடுத்துக்காட்டாக இங்கிலாந்து அறிந்த - அமெரிக்கா அறிந்த - ஏன் உலகமே அறிந்த தங்கள் புலமையை எண்ணி எண்ணி நாங்கள் போற்றுவதுண்டு ஏன்? மக்கள் கடவுளைப் போற்றுவது ஏன்? உயிர்களிடம் உள்ள குற்றங்கள் அனைத்தும் நீங்கிக் கடவுளுடைய எல்லையற்ற இன்பக்குணங்கள் உயிர்களிடமாக விளங்க. அதுபோலத் தங்களைப்போற்றி எங்கள் வாழ்க்கையின் குறிக்கோளை வகுத்துக்கொள்ளுவோம்.

குணநலம் படைத்த குரிசிலே! வருக!

'முனிவரும் மன்னரும் முன்னுவ பொன்னால் முடியும்' என்பது ஒரு ஞானத்துறவியின் நல்வாக்கு. அந்தப் பொன்னை ஆக்கும் திறம் அறிவாளியின் அகத்தில் உள்ளது. அதனை உணர்ந்தே மேலைநாட்டுப் பொருளாதாரச் சங்கங்களும தங்கள் தலைமையை விரும்பி ஏற்றது; நற்பயன் கண்டது. ஆனால் மேலை நாட்டுப் பொருளாதாரச் சங்கங்கள் அரசியலோடு பிணைந்தன. ஆட்சிச் சட்டத்தால் பலவேறு உருவம் அடைவன. அங்ஙனம் ஆகாது எந்நாட்டிலும் எக்காலத்தும அழியாது நிற்கும் பொருளாதார அறிவைப் புலப்படுத்துவது வள்ளுவர் கூறும் பொருட்பால் ஒன்றே. அதனை வெளியிடும் பணியை அணியாகக் கொண்ட முனிவர் தலைவராகிய ஸ்ரீ-ல-ஸ்ரீ மகா சந்நிதானம அவர்களுடைய அருளாட்சிபெற்ற இவ் விழாவிற்குத் தாங்கள் தலைமைதாங்குவது, மாறாத - மடியாத புகழை நிலைபெறுத்தும செயலாகும்.

பொருட்பால் வாழ்க! பொருளாதார நிபுணர் வாழ்க!!
சண்முகம் வாழ்க!!!

ஆவணிமூல விழாவில்

சென்னைப் பல்கலைக்கழகத்துப் பேராசிரியர்,
உயர்திருவாளர்,

ரா. பி. சேதுப்பிள்ளை. B.A., B.L., அவர்களுக்கு

ஆதீனக் கல்வி நிலையத்தின் சார்பில்

அளித்த பாராட்டுரை.

அறிவின் கடலுக்கு அமைந்த சேதுவே!

இயல்பாக உருளுகின்ற உருளையைத் தட்டிவிட்டால் அதிகமாகச் சுழலும்; இயற்கையாக அலையெழும் குளத்தில் நம் கையசைப்பும், கடுங்காற்றசைப்புங் கலந்தால் அலை சற்று அதிகமாகும். எப்பொழுதும இயற்கையை அநுபவிக்கும ஒருவனுக்கு, ஒரே சமயத்தில் வேனிற் பருவத்தையும், வேய்ங்குழலோசையையும், வானமதியையும், வளரிளங் காற்றையும காட்டினல் அவன் உள்ளம் இயற்கையைக் கொஞ்சம் அளவுகடந்து அநுபவிக்கும். இது பழக்கத்தில் கண்டது கைதட்டி ஆர்ப்போசையை அதிகமாகக அதிகமாகக, பாடகனுக்கும பேச்சாளனுக்கும உணர்ச்சியும அதிகமாகும. ஆனல் அது ஒருகாலத்தில் - ஒரு சமயத்தில்மட்டும் நிகழ்வது. எப்பொழுதும் கலைஞனது உணர்ச்சியைத் தூண்டிவிடும ஒருவழிதான் பட்டமும பதவியும அளித்துப் பாராட்டுவது இதனையறிந்து எங்கள் குருமகாசந்நிதானம தங்களுக்குச் 'சொல்லின் செல்வன்' என்னும பட்டம தந்தருளியதைக் கண்டு நாங்கள் பாராட்டுகிறோம.

தமிழகம் தந்த தனிப்பெரும் புலவ!

அறிவுள்ள குழந்தையைத் தந்தை பாராட்டினல் தாய் மகிழ்வாள். தாய் பாராட்டினல் தந்தை மகிழ்வான். இருவருமே சேர்ந்து பாராட்டினல் அக்கம்

பக்கத்திலிருக்கும் அனைவரும் மகிழ்வர். அறிவும், ஆராய்ச்சிவன்மையும் அமைந்த தங்களைத் தந்தையாகிய அரசியலும பாராட்டுகிறது ஆன்மவளர்ச்சியின் தாயாகிய எங்கள் ஆதீனமும் பாராட்டுகின்றது. ஆகவே, அககம்பக்கத்து உறவின்முறையாராகிய நாங்களும் தங்களைப் பாராட்டி மகிழவடைவதில தடையேதும் இல்லை.

எதுகை மோனை எழில்நடை வல்லோய் !

தமிழநாட்டில் புலவர்களை இரண்டு நிலையங்கள் போற்றின. ஒன்று அரண்மனை. மற்றொன்று அரன் மனை. அரண்மனை அயலவர் கையில சிககியகாலத்து அந்தப்பணிகளை அரன்மனைகளே நடத்தின. அத்த கைய அரன்மனைகளில் சிறந்த மனைதான் எங்கள் தருமபுர ஆதீனம. எண்ணிறந்த புலவர்களுக்கு அது ஏற்றங் கொடுத்தது. அத்தகைய புலவர்கள் இன்று தமிழகத்தின் அறிவுவீதிகள்தோறும் பவனி வருகின் றனர்: அப்படி உலாவருவோர் வரிசையில் தங்கள் பெயர் இன்று தலைமையாகப் பொறிககப்பெற்றிருப்பதைக் கண்டு மாணவர்களாகிய எங்கள் உள்ளம தனிப்பெருமை யடைகிறது.

சுருங்கச் சொல்லி விளங்கவைப்போய் !

பட்டமும பண்பும், கலையும பொருளும், அறிவும் பயனும தகக இடத்தை அடைநதுவிட்டன. தண்தமி ழைச் சுவைத்துககொண்டிருக்கும் தங்களுக்கே 'சொல் லின் செலவன்' என்ற பட்டம உரியது எனறு நாஙகள் உளமாரப்பாராட்டி மகிழகிறோம்.

மங்கலவாழ்த்துப் பாடல்

திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்
கொங்கலர் தார்ச் சென்னி குளிர்வெண் குடைபோன்றிவ்
அங்கண் உலகளித்த லான்;

ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்
காவிரி நாடன் திகிரிபோல் பொற்கோட்டு
மேரு வலந்திரித லான்;

மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்
நாமநீர் வேலி உலகிற்(கு) அவன் அளிபோல்
மேல் நின்று தான்சுரத்த லான்;

பூம்புகார் போற்றுதும் பூம்புகார் போற்றுதும்
வீங்குநீர் வேலி உலகிற்(கு) அவன்குலத்தோ(டு)
ஓங்கிப் பரந்தொழுக லான.

அறவுரை

தெரிவுறக் கேட்ட திருத்தகு நல்லீர்!
பரிவும் இடுக்கணும் பாங்குற நீங்குமின்
தெய்வம் தெளிமின் தெளிந்தோர்ப் பேணுமின்
பொய்யுரை அஞ்சுமின் புறஞ்சொல் போற்றுமின்
ஊனூண் துறமின் உயிர்க்கொலை நீங்குமின்
தானம் செய்ம்மின் தவம்பல தாங்குமின்
செய்ந்நன்றி கொல்லன்மின் தீநட்(பு) இகழ்மின்
பொய்க்கரி போகன்மின் பொருண்மொழி நீங்கன்மின்
அறவோர் அவைக்களம் அகலா(து) அணுகுமின்
பிறவோர் அவைக்களம் பிழைத்துப் பெயர்மின்
பிறர்மனை அஞ்சுமின் பிழைஉயிர் ஓம்புமின்
அறமனை காமின் அல்லவை கடிமின்
கள்ளும் களவும் காமமும் பொய்யும்
வெள்ளைக் கோட்டியும் விரகினில் ஒழிமின்
இளமையும் செல்வமும் யாக்கையும் நிலையா
உளநாள் வரையா(து) ஒல்லுவ(து) ஒழியாது
செல்லும் தேஎத்துக்(கு) உறுதுணை தேடுமின்
மல்லன்மா ஞாலத்து வாழ்வீர்... —இளங்கோவடிகள்

இ - ள் :- எல்லாரும என்று சொல்லப்படுகின்ற படர்க்கைப்பெயர்ச்சொல்லும, எல்லீரும என்று சொல லப்படுகின்ற முன்னிலைப் பெயர்ச்சொல்லும, பெண்மை என்னும் சொல்லை முன்னடுத்த பெண்மகன் என்னும பெயர்ச்சொல்லும் இவை மூன்றும அவைபோலப் பாலறிபவந்த உயர்திணைப் பெயராம் என்றவாறு.

நாணுவரை யிறந்தாளதன்மையளாகிப் புறத்துப் போய் விளையாடும் பெண்மகளைப் பெண்மகன் என்பது முற்காலத்து வழககம். அதனை இப்பொழுது மாறோககத் தார் வழங்குவர். மாறோக்கம என்பது கொற்கை சூழ்ந்த நாடு. (கய)

நிலப்பெயர் குடிப்பெயர் குழுவின் பெயரே
வினைப்பெயர் உடைப்பெயர் பண்புகொள பெயரே
பல்லோர்க் குறித்த முறைநிலைப் பெயரே
பல்லோர்க் குறித்த சினை நிலைப் பெயரே
பல்லோர்க் குறித்த திணை நிலைப் பெயரே
கூடிவரு வழக்கின் ஆடியற் பெயரே
இன்றிவர் என்னும் எண்ணியற பெயரோ
டன்றி அனைத்தும் அவற்றியல் பினவே. (168)

என் - எனின், இது உயர்திணையொருசார்ப் பெயர் களை உணர்த்தல் நுதலிறறு.

இ - ள் :- அருவாளன் சோழியன் என்றாற்போல ஒருவன் தாம் பிறந்த நிலத்தினைற பெறற பெயர்களும, மலையமான் சேரமான பார்ப்பான் அரசன் என்றாற் போல அவன் தான் பிறந்தகுடியாற்பெற்ற பெயர்களும், அவையத்தார் அத்திகோசததார் வணிககிராமத்தார் என்றாற்போலத் தாம்திரண்ட திரண்ட திரடசியினாற் பெற்ற பெயர்களும, உண்டார் என்றாற்போல அவன் தான் செய்யும தொழிலாற பெறற பெயர்களும, அம்பர் கிழாஅன் அம்பருடையான் என்றாற போல அவன்

தனது உடைமையாற் பெற்றபெயர்களும், கரியான் செய்யான் என்றாற்போலத் தனது பண்பினால் பெற்ற பெயர்களும், தந்தையர் தாயர் என்றாற்போலப் பலலோரைக கருதின கமது முறையால் பெற்ற பெயர்களும, பெருங்காலர் பெருந்தோளர் பெருங்கண்ணர் என்றாற் போல பல்லோரைக கருதின தமது சினைநிலைமையாற் பெற்ற பெயர்களும், குறவர் ஆயர் வேட்டுவர் என்றாற் போலப் பல்லோரைக கருதின குறிஞ்சி முதலிய திணைகளாற் பெற்ற பெயர்களும் இளந்தலைமகார் தம்மிற் கூடிவரும் வழக்கின்கண் அவர் தமது விளையாட்டுவகையான் தாமே தமககு அப்போதைககுப் பட்டிபுத்திரர் கங்கைமாத்திரர் என்றாற்போல படைத்திட்டுககொண்ட பெயர்களும், ஒருவர் இருவர் மூவர் நாலவர் என்றாற் போல இத்துணைவர் எனத் தமது வரையறையுணர நிற்கும் எண்ணியல்பினாற் பெற்ற பெயர்களும் மேற் கூறிய பெயர்கள் போலப் பாலறியவந்த உயர்திணைப் பெயராம் என்றவாறு. (கக)

அன்ன பிறவும் உயர்திணை மருங்கில்
பன்மையும் ஒருமையும் பாலறி வந்த
என்ன பெயரும் அத்திணை யவ்வே. (169)

என் - எனின், இதுவும் உயர்திணைப் பெயருக்குப் புறனடையுணர்த்துதல் நுதலிற்று.

இ - ள் :- மேற்கூறிய அத்தன்மை பிறவுமாயுள்ள உயர்திணையிடத்துப் பன்மையும ஒருமையுமாகிய பால்களை அறியவந்த எலலாப் பெயர்களும அவ்வுயர் திணைக குரிய பெயர்களாம் என்றவாறு.

உ - ம் :- ஏனாதி, வாயிலான், வண்ணத்தான், சுண்ணத்தான், பிறன், பிறள், பிறர், தமன், தமள், தமர், நுமன், நுமள், நுமர், மற்றையான், மற்றையாள், மற்றையார் எனவரும. பிறவும் அன்ன. (கஉ)

அதுஇது உதுஎன வரூஉம் பெயரும்
அவை முதலாகிய ஆய்தப் பெயரும்
அவைஇவை உவைஎன வரூஉம் பெயரும்
அவைமுத லாகிய வகரப் பெயரும்
யாதுயா யாவை என்னும் பெயரும்
ஆவயின் மூன்றோ டப்பதி னைந்தும்
பாலறி வந்த அஃறிணைப் பெயரே. (170)

என் - எனின், நிறுத்த முறையானே அஃறிணைப் பெயராமாறு உணர்த்தல் நுதலிற்று.

இ - ள் .- அது, இது, உது, என்று சொல்லப்படுகின்ற சுட்டு முதற் பெயர்களும், சுட்டெழுத்தினை முதலாகவுடைய அஃது, இஃது, உஃது, எனனும ஆறு தொடர்மொழிக குற்றியலுகரப் பெயர்களும் அவை, இவை, உவை என்று சொல்ல வருகின்ற சுட்டுமுதற் பெயர்களும, அச சுட்டெழுத்தினை முதலாகவுடைய அவ் இவ், உவ் என்னும வகர வீற்றுப் பெயர்களும், யாது யா யாவை என்று சொல்ல வருகின்ற அவ் வினாப் பொருளிடத்துவரும மூன்று பெயருமாகவரூஉம் பதினைந்து பெயர்களும, ஒருமை பன்மைப்பால் அறியவநத அஃறிணைப் பெயராம என்றவாறு. (கஙூ)

பல்ல பலசில என்னும் பெயரும்
உள்ள இல்ல என்னும் பெயரும்
வினைப்பெயர்க் கிளவியும் பண்புகொள் பெயரும்
இனைத்தெனக் கிளக்கும் எண்ணுக்குறிப் பெயரும்
ஒப்பி னாகிய பெயர்நிலை உளப்பட
அபபால் ஒன்பதும் அவற்றோ ரன்ன. (171)

என் - எனின், இதுவும் அஃறிணை யொருசார்ப் பெயர்களை யுணர்த்தல நுதலிற்று.

இ - ள் :- பல்ல பல சில என்று சொல்லப் படுகின்ற பெயர்களும், உள்ள இல்லை என்னும் பெயர்களும், உண்டது உண்டன என்றாற்போலவரும வினைப்பெயர் களும், கரியது கரியன எனறாற்போலவரும் பண்பினைக் கொணட பெயர்ச்சொறகளும, ஒன்று பத்து நூறு ஆயிரம எனறாறபோலச சொலலப்படுகினற இத்துணை யென வரையறை உணர்ததும எண்ணுக்குறிப்பாற் பெற்ற பெயர்ச் சொற்களும, பொன்னன்னது பொன் னன்ன எனறாற்போல உவமததினுற் பெற்ற பெயர்ச் சொறகளும உடபட அககூற்றென்பதும மேற்கூறிய பெயர்போலப் பாலறிய வரும அஃறிணைப் பெயர்களாம் என றவாறு. (கச)

கள்ளொடு சிவணும் அவ்வியற் பெயரே
கொளவழி உடைய பலவறி சொற்கே. (172)

என - எனின், இதுவும பாலறிய வரும் அஃறிணை யொருசார்ப் பெயர்களையுணர்ததல நுதலிற்று.

இ - ள :- கள் என்னும வாய்பாட்டோடு பொருந் தும அவவஃறிணையியறபெயர்கள் பலவறி சொல்லா தற்குக கொள்ளும இடமுடைய என்றவாறு.

கள்ளொடு சிவணின இயற்பெயர் பலவறி சொல் லாகக கொள்ளுமிட முடைய எனவே,கள்ளொடு,சிவணாத பெயர்கள பலவறி சொல்லாகக கொள்ளப்படாது; ஒருமைககும் பன்மைக்கும் பொதுவாய் நிற்கும் என்ற வாறு.

உ - ம்:- நாய்கள், ஆக்கள் எனப் பன்மை யுணர நின்றன; நாய், ஆ எனக் கள்ளொடு சிவணாமையிற் பொதுவாய நின்றன எனக கொளக. (கரு)

அன்ன பிறவும் அஃறிணை மருங்கின்
பனமையும் ஒருமையும் பாலறி வந்த
என்ன பெயரும் அத்திணை யவ்வே. (173)

என் - எனின், இஃது அஃறிணைப்பெயர்க்குப் புறனடை உணர்த்தல் நுதலிற்று.

இ - ள் :- அத்தன்மையன பிறவுமாகிய அஃறிணையிடத்துப் பன்மையும் ஒருமையுமாகிய பால்களை அறிய வந்த எல்லாப் பெயர்களும் அவ்வஃறிணைக்குரிய பெயர்களாம் என்றவாறு.

உ - ம் :- ஆ, நாய், கழுதை, ஒட்டகம், புலி, புல்வாய் எனச் சாதிபற்றி வருவன வெல்லாங் கொள்க. நிலம், நீர், தீ, வளி, ஆகாயம் என்பன அவற்றின்பாற்படும். உண்டல், தின்றல் எனப் பால்காட்டாத தொழிற் பெயரும், கருமை செம்மை யெனப் பால்காட்டாத பண்புப் பெயரும், மற்றும் அவற்றுப்பாலே படும் எனக் கொள்க. மற்றையது, மற்றையன, பிறிது, பிற என்பனவுங் கொள்க. பிறவும் அன்ன. (கசு)

தெரிநிலை உடைய அஃறிணை இயற்பெயர்
ஒருமையும் பன்மையும் வினையொடு வரினே. (174)

என் - எனின், மேற் புறனடையுள் பால் அறிய வருவனவற்றோடு ஒன்றாக ஓதப்பட்ட இயற்பெயர்கள் பாலறிய வருமாறு உணர்த்தல் நுதலிற்று.

இ - ள் :- அஃறிணையிடத்து ஒருமையும் பன்மையுமாகிய பால்கள் எப்பொழுது தெரிவதெனின் பால் காட்டும் வினையொடு வரும்பொழுது என்றவாறு.

உ - ம் :- ஆ வந்தது, ஆ வந்தன எனவும் வினையால் பாலறிய வந்தவாறு கண்டுகொள்க. (கஎ)

இருதிணைச் சொற்குமோ ரன்ன உரிமையின்
திரிபுவேறு படூஉம் எல்லாப் பெயரும்
நினையுங் காலைத் தத்தம் மரபின்
வினையோ டல்லது பால்தெரி பிலவே. (175)

என் - எனின், நிறுத்த முறையானே விரவுப் பெய ராமாறு உணர்த்தல் நுதலிற்று.

இ - ள்:- இருதிணைப் பொருட்கும் ஒன்று போன்ற உரிமை காரணமாக அவ்வத்திணைககண் செலவு வரவுடைத்தாய உயர்திணைககண் சென்றகாலத்து உயர் திணைப் பெயராயும அஃறிணைககண் சென்ற காலதது அஃறிணைப்பெயராயும வேறுபடுகின்ற விரவுப்பெயர்க ளெல்லாம் ஆராயுங் காலத்து அவ்வத் திணையே யுணர்த்துதற்குரிய முறைமையினையுடைய வினைச்சொற் களான அல்லது, திணைதெரிதல இல என்றவாறு.

சாத்தன் வந்தான், சாத்தன் வந்தது எனவரும். வினையானேயன்றித் தத்தம மரபிற் பெயரானும் திணை யறியப்படும் என்பது.

உ - ம்.- சாத்தன் ஒருவன், சாத்தன் ஒன்று என வரும்.

இன்னும அவ்விலேசானே மேற்கூறிய அஃறிணை யுடைய பெயர்களும, வினையானே யனறிப் பெயரானும பால் அறியப்படுமெனக கொளக. ஆ ஒன்று, ஆ பல எனவரும். (கஎ)

நிகழூஉ நின்ற பலர்வரை கிளவியின்
உயர்திணை ஒருமை தோன்றலும் உரித்தே
அன்ன மரபின் வினைவயி னான. (176)

என் - எனின், அவவிரவுப்பெயர் தத்தம் மரபின் வினையானன்றி, விரவு வினையானும திணையறியப்படும என எய்தியதன்மேற சிறப்புவிதி வகுத்தல நுதலிற்று.

இ - ள்:- நிகழகாலத்தை யுடைத்தாய்நின்ற பலரை யுணர்த்தும என்று வரைநதோதப்பட்ட செய்யும

என்னும் சொல் காரணமாக அவ்விரவுப்பெயர் உயர் திணை யொருமைப்பாலென்பது தோன்ற நிற்றலும் உரித்து; யாண்டுமோ எனின், அன்று அத்தன்மைத் தான முறைமையினையுடைய சில செய்யும் என்னும் வினைச்சொலலிடத்து என்றவாறு.

உ-ம் :- சாத்தன் யாழெழூஉம், குழலூதும், பாடும் எனவும சாத்தி சாந்தரைக்கும, பூந்தொடுக்கும் எனவும் வரும்.

சாத்தனொடுங் கிடக்கும என்பன, அன்னமரபின் வினையன்மையின திணை தெரியாவாயின. இனி வினை யியலுள் வியங்கோளின பின்னர்ச் செய்யும என்பதனை இயைபின்றி வைத்தாராய்ந்ததனுன் வியங்கோள் எனும் உயர்திணையொருமை தோன்றும் என்றும் கொள்ளப் படும.

உ-ம் :- சாத்தன் யாழெழூஉக, குழலூதுக என வரும.

இத்துணையுங் கூறியது விரவுப்பெயரது பொது விலக்கணம என உணர்க. (கக)

இயற்பெயர் சினைப்பெயர் சினைமுதற் பெயரே
முறைப்பெயர்க் கிளவி தாமே தானே
எல்லா நீயிர் நீஎனக் கிளந்து
சொல்லிய வல்ல பிறவும் ஆஅங்
கன்னவை தோன்றின் அவற்றொடுங் கொளலே.
(177)

என் - எனின், விரவுப்பெயர்க்குப் பெயரும் முறை யும் தொகையும உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :- இருதிணைக கண்ணும் வாளாது இயன்று வருதலான் இயற்பெயரெனவும் ஓர் சினைக்காரணத்தாற்

பெற்றமையிற் சினைப்பெயர் எனவும், சினையோடு தொடர்ந்தமுதலை யுணர்த்தினமையிற் சினைமுதற் பெயரெனவும், முறைமையாற் பெற்றமையின முறைப் பெயராகிய சொல்லெனவும், ஓர் காரணம இன்மையின் வாளாது தாளெனவும், எல்லாமெனவும், நீயிரெனவும், நீ எனவும் ஆசிரியனுல் விதந்தோதப்பட்டன வல்லாத பிறவுமாகிய பெயர்களிடத்து இருதிணையிலும் விரவும் அத்தன்மையன தோன்றுமாயின் அவற்றோடுங்கூட ஆசிரியன் விதந்தோதின பெயர்களை விரவுப் பெயராம் எனக கொள்க என்றவாறு.

அப்பெயர் பெயர். அம்முறை முறை. அத்தொகை தொகை என்பதாம் இயற் பெயர் முதலாக முறைப் பெயர் ஈறுக ஓதினவெல்லாம பலவெனினும், ஞாபக வகையான் ஒன்றெனப் பட்டன.

பிறவும் என்றதனுற் கொள்வன யாவை யெனின், குறவன் இறவுளன் குன்றுவன் எனவும், காடன் காடி எனவும, நாடன் நாடி எனவும், துறைவன் சேர்ப்பன் தரையன் திரையன் எனவும் ஒருமைத திணைப்பெயராய் வருவனவும ஆண் பெண் என்பனவும் பிறவும் இன்னோரன்னவும போலும். (௨0)

அவற்றுள்,
நான்கே இயற்பெயர் நான்கே சினைப்பெயர்
நான்கென மொழிமனுர் சினைமுதற் பெயரே
முறைப்பெயர்க் கிளவி இரண்டா கும்மே
ஏனைப் பெயரே தத்தம் மரபின. (178)

என் - எனின், மேல் தொகுத்தோதின விரவுப் பெயர்களை விரித்தோதுதல் நுதலிற்று.

இ - ள்: மேலோதப்பட்டவற்றுள் இயற்பெயரெனப் பட்டது நான்கு வகைப்படும். சினைப்பெயர் எனப் பட்டது நான்கு வகைப்படும். சினைமுதற் பெயரினையும்

ஆக வம்புரிந் திடமொயி லடைந்திடுங் காலைச்
சோக நீகருறீ சானனு மவரொடுந் துன்னி
மோக மாக்கிடு மவுணரை முருககச்சண் டிகையாந்
தோகை யோடுரை செயவொலி யோரிகு ழனையாள்.

கு - ரை: ஆகவம் - போர், மொய் - போர்க்களம், ஈசானன் - ஈசானன் என்னும் பெயருடையசிவன். அவரொடும் துன்னி - பிரமாணிமுதலிய அச்சப்தமாதர்களுடனே சேர்ந்து கொண்டுபோய், மோகம - உயிர்களுக்குவருத்தம், முருக்க - அழிக்கும்படி, உரைசெய - சொல்லவும, ஒலிஓரிசூழ் அனையாள் - பேரொலிசெய்கின்ற நரிகளால் சூழபபெற்ற அநதச் சண்டிகை என்னும் சிவசக்தியானவள்.

வி - ரை: ஈசானர் சண்டிகையைப் பார்த்து நீ யசுரரை யழிக்கவேண்டுமென்று சொல்லவும தேவர்களின் சரீரங்களி லிருந்து மிக உக்கிரத்துடன் நூறு நரிகள் ஊளையிடுவதுபோலப் பேரொலிசெய்துகொண்டு ஒரு சண்டிகாசக்தி வெளிக்கிளம் பிற்று என்று முதனூலில் சொல்லப்பட்டிருக்கிறது. தேவி பாகவதம், சண்டிகையினுடைய திருமேனியினின்றும் மகாத்மா வாயும் மகாபயங்கரமாயும் மகா தீட்சணியமுள்ள ஓர் சிவசக்தி வெளிப்பட்டது; அச்சக்தியே சிவபெருமானைச் சும்பநிசும்பர் களிடம் தூதனுப்பியது எனக் கூறுகின்றது. அச்சக்தியே சிவதூதி சாமுண்டியெனப் பின்னர் கூறப்படுகின்றது. 12

வேக மோடவ ளீசனை நோககியே விளம்பும்
பாக சாதன னதியோர்க் கிடர்செயும் பதகச்
சூக ரம்பொரு சும்பனு நிசும்பனுஞ் சூழ
மாகு லத்தரா யழிந்திட வனையர்பா லடைநீ.

கு - ரை: அவள் ஈசனை - அவளுக்குரிய ஈசானனை, பாக சாதனன் - இந்திரன், பதகம் - துரோகம், சூகரம் பொரு - பன்றியை ஒத்த, ஆகுலத்தராய் - வியாகூலத்தைபடைந்தவர் களாய், அனையர்பால் - அச்சும்பநிசும்பரிடம், நீ அடை - நீ தூதனுகச்செல்வாய்.

வி - ரை: சும்பநிசும்பர்கள் இழிந்த பாவச்செயல்களிலே விருப்பமுடையவராதலின் அவர்களுக்குப் பன்றி யுவமைகூறப் பெறறுள்ளது. இக் கருத்துப்பற்றியே "கோருகேழ் சும்ப னென்ன" எனவிந்நூலிற் பிறவிடத்துக் கூறியதூஉமென்க.

சும்பநிசும்பர்கள் இழிந்தசிந்தையராகலின் தான் தூதனுப் பிச் சொல்லும் நலவுரைகேளாது போர்புரிந்து அழிவது நிச்சய மாதலின், "ஆகுலத்தாயழிந்திட வனையர்பாலடைநீ" என்றனள் என்க. 13

அனையர் தம்மிடைப் பொன்னுல கரிக்களித் திடவு
நனிம கத்தவி சுருண நல்கவும் பின்னர்த்
தனிய ரத்திடை யவுணர்சார்ந் திடவுமே சாற்றாய்
வினைய ரின்னவை மறுத்துப்போர் புரிந்திட மேவில்.

கு - ரை: பொன்னுலகு - தேவருலகு, அரி - இந்திரன், மகத்து அவி - வேள்விகளில் கொடுக்கபபடுகின்ற அவியுணவை. சுரர் - தேவர்கள். தனி அரம - அசுரர்தமக்குத் தனியாகவுள்ள பாதாளலோகம், வினையர் - தீவினைபுரிதலையுடைய சும்பநிசும்பர், மேவில் - விருமபினால்.

வி - ரை: வேள்வியில் தேவர்களின் பொருட்டுக் கொடுக் கப்படுகின்ற ஆவியுணவினையெல்லாம் சும்பநிசும்பர்களேபெற்று உண்டுவருகின்றார்களாதலின் "மகத்தவி சுருண நல்கவும" என்றாள். 14

நும்மு டற்றசை யாற்சண்டி சிவைகட்கு நொய்தில்
வெம்மைச் சாடரப் பசியற்றுத் திருத்தியு மேவும
இமமெ னும்பொழு தின்கணென் றிசைத்திவண் மீள்
றம்மை யேவலா லேசிவ தூதியா யமர்ந்தாள். [கென்

கு - ரை: நம்உடல் - உங்கள் உடலினுள்ள, சண்டிசிவை - சண்டி யிடமுள்ள நரிகள், சாடரம் - வயிறு, இம் எனும் - இம் என்று சொல்வதற்கு வேண்டிய. பொழுது - சிறுபொழுது. "இமமென்னும முன்னே" தனிப்பாடல். இசைத்து - சொல்லி,

அம்மை - சண்டிகை, ஏவலால் - சிவனைத் தூதனுகுமாறு கட்டளையிட்டதால் அனுப்பியதால், சிவதூதியென்னும பெயருடையவளாயிருந்தாள் என்க.

வி - ரை· சண்டி - பார்த்தமாத்திரத்தில் பயஞ் செய்பவள் இவள் அனேக ஓரிக்கூட்டங்களால் சூழபபெற்றவள். 15

அன்ன பின்னரீ சானனு மசுரர்பாற் றேவி
சொன்ன வம்மொழி சொற்றிடச் சுடுசினங் கொண்டு
கன்னி பால்வந்து கடுஞ்சமர் கருதியே சத்தி
மின்னு தண்ணமா தியபடைக் கலமெலாம விடுத்தார்.

கு - ரை:- அசுரர்பால் - சுமபநிசும்பர்களிடம சென்று. சுப்பநிசுமபர் சுடுசினங்கொண்டு கன்னிபால்வந்து ... .படைக் கலம் விடுத்தார்· சுடுசினம - சினம் நெருப்புப்போலத் தன்னைச சேர்ந்தாரை வருத்தும் இயல்பினதாகலின் அதனைச சுடுசினம என்றார். 'சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி யினமென்னு மேமாப்புணையைச் சுடும்' என்பது திருக்குறள். கன்னிபால் - சண்டிகையினிடம். சத்தி - வேல். தண்ணம் - மழு. 16

ஏனு றுஞ்சிவ தூதியன் னவர்படை யிமைப்பின்
மானு றுந்தவர் பொழியம்பிற் கோறலும் வணங்கார்
நானு றுஞ்சிலைச் சேனைக்கா வலரெதிர் நண்ணித்
தானு சத்திமேற் சரம்பொழிந் தடுசமர் சமைந்தார்.

கு - ரை.- ஏண் - வலிமை. தவர்பொழி - வில்லானது சொரிகின்ற. கோறல் - கொல்லுதல். சேனைக்காவலர் - சேனைத் தலைவர்கள். தானுசத்தி - சிவசக்தியாகிய சண்டிகை. சமைந்தார் - செய்தார். 17.

காளி யும்மது நோக்கினள் கரிக்குலங் கற்கி
மீளித் தேரரைச் சூலநாட் டங்களால் விளித்துத்
தூளிப் போர்த்தலை யுதிரமுங் குடித்தவர் தூவும்
யாளிப் பற்களாற் கறித்தத றினடரை யடங்க.

கு - ரை:- அது - சேனைத்தலைவர்கள் சண்டிகையின்மீது அம்புசொரிந்து போர்தொடங்கியதனை (அசுரருடைய,) கரிக்குலம் - யானைக்கூட்டம். கற்கி - குதிரைகள். தேரர் - தேர்வீரர், (ஆகியவர்களை) நாட்டம் - வாள். விளித்து - கொன்று. தூளி - புழுதி யெழுகின்ற. போர்த்தலை - போர்க்களத்தில், அவர் தூ - அவ்வசுரருடைய உடம்பிலுள்ள மாமிசம். தரை அடங்க - பூமி முழுவதிலும். 18.

அயனில் மந்திர பூதவன் னிசத்தினு லவுண
ருயர்வொ டுககமா கேசனில் சூலத்தா லொறுத்தாண்
மயமு றும்பரி தித்திற லாலவை ணவியும்
சயமு றுங்கவு மாரியுஞ் சத்தியாற் சாய்த்தார்.

கு - ரை:- இதுமுதல் இரண்டுகவிகள் ஏழுமாதர்கள் போர்புரிதலைக் கூறுவன. அயன் இல் - பிரமாணி. மந்திரபூதம் மந்திரித்தலைப்பெற்ற. வன்னிசம் - நீர். உயர்வுஒடுக்க - வீரம் பலம் ஒளி ஆகிய உயர்ந்த தன்மைகளை அழிக்கவும். மாகேசன் இல் - சிவசக்தி; மாகேசுவரி. மயம் - அழகு. திறல் பரிதி - வலிமையுள்ள சக்கரப்படை. சத்தி - வேல்.

வி - ரை:- வன்னிசம் - நெருப்பிலிருந்து தோன்றுவது; காரணப்பெயர். 'மேவரு கனலில் தோன்றும் வண்ணவொண் கமலம்' கந்தபுராணம். 19

பாக சாதனன் பாரிவச் சிரத்தினுற் பன்றி
யாகி துண்டத்தாற் றசனத்தா னேமியா லழித்தா
ளாக வந்தனி னரசிங்கி யொலியுட னவுணர்
போக வென்றன ளுகிரினுற் புலவர்க டுள்ள.

கு - ரை:- பாகசாதனன் பாரி -இந்திரசக்தி. பன்றியாகி - வாராகி. துண்டம் - மூக்கு. தசனம் - பல். நேமி - சக்கரம். நரசிங்கி - நரசிங்கசக்தி. ஆகவம் - போர். ஒலி - பெரிய கர்ச்சனை. போக - அழியுமாறு. உகிர் - நகம். தம் பகைவரைக் கொல்லுதலால் தேவர் மகிழ்ச்சியுடையாராவாராதலின் 'புலவர்கள் துள்ள' என்றார். புலவர் - தேவர். 20.

சண்டஞ்சே ரட்ட காசத்தாற் றானவர் மோகம்
மண்டி யேவிழ வுண்டனண் மாச்சிவ தூதி
மண்டி யப்படை யோடலு நிசும்பசும் பன்மார்
ஒண்டி றற்குரோ தவதியாம் பகினிபெற் றுள்ளோன்.

கு - ரை:- சண்டம் - மிகுதி தானவர் - அசுரர்; தனு என்பவளின் புதல்வர். தனு திதி என்பவை அசுரர்களின் மாதுர் பேதங்கள். மோகம மண்டி - மயக்கமுற்று. மண்டிய - மிகுதியாயுள்ள. அப்படை - அவ்வசுரசேனைகள். பகினி - தங்கை.

வி - ரை:- சிவதூதி அசுரசேனைகளைத் தின்னவும் எஞ்சிய படைகள் ஓட்டமெடுத்தன. அதனைக்கண்ட இரத்தபீசன் என்பவன் போருக்கு வந்தான். அவன் சுமபநிசுமபர்களின் தங்கையாகிய குரோதவதியின் புதல்வன். 21

வெஞ்சி னங்கொடே யிரத்தபீ சாசுரன் விரைவில
வெஞ்ச மஞ்செய வடுத்தனன் மேதினி மிசையில்
வஞ்சன் மேனியின் குருதிசேர் துவன்மன் னியதே
லஞ்ச லில்லிரத் தப்பீச னொருவனுண் டெழுவரன்.

கு - ரை:- சமம் - போர். வஞ்சன்மேனி - இரத்தபீசனுடம்பிலிருந்து. குருதிசேர் துவல் - இரத்தத்தில் பொருந்திய ஒருதுளி. மன்னியதேல் - படுமாயின். இரத்தப்பீசன் ஒருவன் - மற்றொரு இரத்தபீசன். எழுவான் - தோன்றுவான்.

வி - ரை:- மேதினி - பூமி. மதுகைடபர்களின் மேதசின் (கொழுப்பினது) சம்பந்தமுடையது மேதினி; 'அத்திதிமைந்தர் மேத மதுகொண்டே யவனிதன்னைச், சித்தசன் சனகன்செய்யச செய்யமேதினி யென்றோர்பேர், இத்தகை மருவிற்றம்ம' இந் நூல் முதலததியாயம 52 செ. இரக்தபீசன் - இரத்தத்தை முளையாக வுடையவன, மறுபடியும உற்பத்திபண்ணக் கூடிய இரத்தத்தை யுடையவன் என்பதாம. இரத்த பீசனெனபவன் தன்னுடைய தேகத்திலிருந்து விழும் இரத்த பிந்துக்கடோறும

தன்னைப்போ லும் பராக்கிரமமுள்ள அநேக அசுரர்கள் தோன்று மாறு உருத்திரனிடம வரயபெற்றுள்ளவன என்பது தேவீ பாகவதம். ஆண்டு - இரத்தம விழுந்த அவவிடம. அப்பொழுதே எனினுமாம. 22

அனையன் சோணித பிந்துவு மம்புதி யாடை
புனையு மங்கைமேற்பொருசீதிடிற்பொருககெனவவுணன்
சனன மாம்வரம் பெற்றவன் போர்செயச் சாரத்
துனைவி லிந்திரா ணியுஞ்சத கோடியைத் தொட்டாள்.

கு - ரை: அனையன் - அவவிரதத்தில் தோன்றும் இரத்தபீசனுடைய. சோணிதபிந்து - இரத்தத்தின் ஒரு துளி யானது. அமபுதி - கடல. மங்கை - பூமிதேவி; பூமி. பொருக் கென - விரைவாக. அவுணன - மறறொரு இரத்தபீசன், சனனம் ஆம - உற்பத்தியாகின்ற. போர்செய - இநதிரசக்தி யுடன் போர்புரிவதறகு, சதகோடி - வசசிராயுதம, தொட்டாள்- (அவன்மேல்) செலுத்தினள் 23

அமரர் தம்பகை சிரமறக குருதிபாய்ந் தழியா
வமர வாபகை போறசெல வளவிலா விரத்த
மமர முன்னப ரத்தினிற் பீசஞசே ரவுண
ரமர வேதைத் தியரெலா மார்ப்புட னெழுந்தார்.

கு - ரை: (இநதிராணியின் வசசிராயுதத்தால்) அமரர் தம்பகை - தேவர்களுக்குப் பகைவனுகிய இரத்தபீசனது. சிரம் அற - தலையறுபடவும், அமரவாபகைபோல - தேவகங்கையைப் போல, செல - பெருக்கெடுத்துச் செல்லவும, அளவிலா இரத்தம் - அவ்வளவில்லாத இரத்தத்திலிருந்து, அபரத்தினில் - பின்பு, அமர - அமரசெய்வதற்கு, முன் - அப்போர்களத்தில்; பீசஞ்சேர் அவுணர் - (இரத்ததைதை முளையாகப்பெற்ற) இரத்த பீசாசுரர், அமரவே - நிறையவும, தைத்தியர்எலாம் - (முன்பு ஓடிய) அசுராகளயாவரும, ஆர்ப்புடன் எழுந்தார் - ஆரவாரத் துடன் போர்க்களததிறகு வநதார்களை.

வி - ரை. அமரமுன் என்பதற்குப் போர்க்களத்தில் எனவும் அமரவே என்பதற்குப போர்புரிதறகெனவும், இரத்த பீசஞ்

சேரவுணா தைததியாஎலாம எனக்கூட்டி, இரத்தபீசத்தைப் பொருநதிய அவுணராகிய தைத்தியர்யாவரும் எனவும பொருள் கோடலுமாம். இபபொருள் கொளளுங்கால் எழுநதார் என்ப தற்குப் போபுரிதற்கு எழுநதார்கள் என விரித்துரைத்துக் கொள்க. 24

மிடலு றுந்திதி புத்திர ரொடுமட்ட மேவு
மடலு றும்மனை மார்பொரு திடவிழி யருவி
யுடலு றுங்குரு திப்புன லிடையெழுந் துலப்பில்
கடலெ னும்படி பரந்தன ரிரத்தபீ சர்களே.

கு - ரை: மிடல் - வலிமை திதிபுத்திரர் - இரத்தபீசாசுரர்கள். அட்டமமேவும் - எட்டு ஆகவிளங்குகின்ற, அன்னைமார் - பிரமாணி முதலிய எழுவரும் காளியும் ஆகிய மாதுர் கணங்கள், இழி - ஒழுகுகின்ற உலப்புகில் - அளவில்லாத. இரத்தபீசர் - வேறு இரத்த பீசர்கள். அட்டமமேவும எனற்கு மிகுதியாக விளங்குகிற எனவும், மாதர் - சபதமாதா எனவும் உரைத்தலுமாம. 25

மிக்க வன்னவர் கதையினன் மாதரை வெகுண்டு
துக்க மெய்தவே மோதலுஞ் சுரர்குழ நோககித்
தொகக தானவர் கணத்தினை யிககணந் தொலைப்பா
னகக்ன் சத்தியே யருள்புரி யென்றனர் நடுங்கி.

கு . ரை: அன்னவர் - இரத்தபீசாகள், கதை - தண்டாயுதம், மாதர் - தேவசக்திகள், மோதல் - அடித்தல், தானவர் கணம் - இரத்தபீசக்கூட்டம், தொலைப்பான் - அழிப்பதற்கு, நக்கன் - சிவன், சக்தி - சக்தியாகிய சண்டிகை. 26

அன்ன காலையிற் சண்டிகை யமரர்கா ளொழிமி
னின்ன லென்றுபின் காளியை நோககியே யிசைப்பா
ளின்ன போதுநின் வாயினை யெங்குமாய் விரித்து
மன்னி ரத்தபீந் துககளை மகிழவொடுங் குடித்தி.

கு - ரை: இன்னபோது - நான் இரத்தபீசருடலைப் பிளக்கின்ற விப்பொழுது. எங்கும ஆய்விரித்து - எல்லாவிடங்களிலும்

பாநதிருக்குமபடியாய்ப் பெரிதாகவிரித்து, மன் இரத்தபீநதுக் களை - அவ்வசுரரின் உடமபிலிருந்து விழும மிகுதியான இரத்தத்தின் துளிகளை. குடித்தி - குடிப்பாய். 27

என்னி லோவிரத் தப்பீசர் வாயிடை யெழுவ
ரன்னர் தங்களை விழுங்குதி நீயென வறைந்து
மின்னு சூலத்தா லவருடல் பிளககவீழ் குருதி
கன்ன லொன்றினிற் குடித்தனள் காளிதான் மன்னே.

கு - ரை: என்னிலோ - நீ வாயைத்திறந்து இரத்தத்தைக் குடிப்பது எதற்காக என்றால், நீ இரத்தத்தைப் பானம் பண்ணும் பொழுது இரத்தபீசர்கள் நின்வாயின்கண் தோன்றுவார்கள். அன்னர் தங்களை - அவர்களை. நீ விழுங்குதி - நீவிழுங்குவாய். என அறைந்து (அதன் பொருட்டே உனக்கு அவ்வாறு சொன்னேன்) என்று சொல்லி. பிளக்க - குத்திப் பிளக்கவும், கன்னல் - நாழிகை. 28

அன்ன காலையி லிரத்தபீ சர்கள்சின மடைந்தெம்
மன்னை மேனியிற் கதைகொடு மோதலு மவட்குத்
தன்ன மேனுநோய் செய்தில தென்னெனிற் சத்தி
மின்னு சிற்சுக வுருவியாய் விளங்கலான் மன்னே.

கு - ரை: அன்னகாலையில் - அப்பொழுது, அன்னைமேனி - சண்டிகையின் உடம்பு, கதை - தண்டாயுதம், தன்னம் - சிறிது, நோய் - துன்பம. என் எனில் - சண்டிகைக்கு வேதனையின்மை எதனாலெனில், சத்தி - சண்டிகை, சிச்சுக உருவிஆய் - சிதானந்தவடிவமுடையவளாய். 29

வி - ரை: சண்டிகை அறிவும் ஆனந்தமுமே வடிவமாக உடையளாதலின், இரத்தபீசரின் கதையடி சிறிதும் அவளுக்குத் துன்பமசெய்யவில்லை

குருதி சோடித்துக் குருதிபீ சக்குழுக் குலைந்து
தரையில் வீழ்ந்திடத் தேவிசத் திரங்களை விட்டாள்
விரைவி லேற்றிரத் தப்பீசர் வீந்தனர் விண்ணோர்
உருகி யோமன மம்மையை யுவந்துபோற் றினரால்.

14. * * *

"சொன்ன" என்பது பரமான்மாவிலக்கணம் கூறி, பின்னும் ஒருவாற்றான் ஆன்மா ஐவகைப்படும் என்றது. அதுவும் அதிலேயே கூறப்பட்டது.

मलकर्मकलाद्यैस्तु निर्मुक्तस्तु सदाप्रिये ।
सर्वाध्वानमतीतश्च मायामोहान्वितश्च सः ॥
निर्मलत्वं सदा याति पदं परममव्ययम् ।
परमात्मा तदा देवि प्रोच्यते प्रभुरव्ययः ॥

என்பதனுல் உணர்க. பின்னும் ஒருவாற்றுல் ஐவகைப் படுமாறு,

अबुद्धश्चैव बुद्धश्च बुध्यमानस्तथैव च ।
प्रबुद्धः सुप्रबुद्धश्च पुनश्च कथयामि ते ॥

என வருமாற்றான் உணர்க. 14

15. * * *

"கலை முதலான" என்பது அபுத்தன் இலக்கணம் கூறுகின்றது. அதுவும் அதிலேயே கூறப்பட்டது.

अबुद्धंच पुनर्देवि कथयामि समासतः ।
तत्त्वं गतात्मसंहारे कलाक्षित्यन्तगोचरे ॥
माया (श्रा)म्य न्निशायां वै संहृत्य परमेश्वरः ।
निर्व्यापारोऽभवत्तावद्यावत्तेनोदयं पुनः ॥
सुखदुःखाद्यभावश्च आत्मवर्गस्य कर्म (तः) ।
मलनिद्रा विमूढात्मा बद्धचैतन्यदृक्क्रियः ॥
न विजानाति शब्दादि नात्मानं च वरानने ।
कारणं न विजानाति पदस्थानं स्वकं प्रिये ॥

सर्वमेतन्न जानाति यतो लुप्ताक्षदृक्क्रियः ।
सन्ति... .. ..स्तत्र यावन्माया त्वहर्मुखम् ॥
अबुद्धस्तु समाख्यातो बुद्धं देवि निबोध मे ।

என்பதனால் உணர்க. 15

16. * * *

"பிரபஞ்சமெல்லா" மென்பது புத்தனின் இலக்கணம் கூறுகின்றது. அதுவும் அதிலேயே கூறப்பட்டது.

अबुद्धश्च समाख्यातो बुद्धं देवि निबोध मे ।
परिपाकागतं कर्म ईश्वरेच्छाकरादृते ॥
प्रकशं नयनं यद्वदनुगृह्णाति भास्करः ।
......................दीशस्तदात्मनः ॥
कलोद्दलितचैतन्यो विद्यादर्शितगोचरः ।
रागोऽस्य रञ्जकत्वेन विषयानन्दलक्षणः ॥
कालो वै कलयेद्धयेनं (तु) (कृ) त्यादि प्रलयावधि ।
नियतिर्नियतं नित्यं योजयत्यशुभे शुभे ॥
परमाणुसहस्रांशं दद्यान्न्यूनं नवाधिकम् ।
पुंभावं तमनुप्राप्य तत्त्वे वै पुरुषाह्वये ॥
पुरं प्रधानमित्युक्तं प्रपञ्चानेकसंकुलम् ।
तत्पुरं पूरयेद्यस्मात्तस्माद्धि पुरुषः स्मृतः ॥
श्रीकण्ठो भगवान्नित्यं नियत्या कर्मतः पशुम् ।
प्रधानपाशजालेन वे (प्र)येदसमञ्जसा ॥
बध्नाति गुणबन्धेन बुद्ध्या वैकारिकेण तु ।
तन्मात्रेन्द्रियबन्धेन दृढभूतैश्च वेष्टितम् ॥
बद्धः संसरति ह्येवं मायाद्यवनिगोचरे ।
संसारः प्रोच्यते यस्मात्संसरेद्यः पुनः पुनः ॥
शब्दादि विषया यस्य विद्यन्ते विषये तदा ।
विषयाः प्रधानमित्याहु र्नानाभेदैःसमन्विताः ॥

नानाकर्मविपाकैश्च भुङ्क्ते तद्भावभावतः ।
एवं भुङ्क्ते स वै यस्मात्तस्माद्भोक्ता स उच्यते ॥
तस्मिंस्तस्मिन्वरारोहे क्षेत्रे वै कर्षको यथा ।
मायाभिलाषमालोक्य कृषते मोहलाङ्गलैः ॥
वापयेन्मोहभावेन मनोवाक्कायकर्मकम् ।
धर्माधर्ममयं बीजं प्रविकीर्य समन्ततः ॥
तस्माद्वै अङ्कुरोत्पत्तिः सुखदुःखफलोदयः ।
बध्यते क्रोधकामेन संसिक्तो रागवारिणा ॥
यस्मिन्देशे च काले च वयसा यादृशेन तु ।
उप्तं शुभाशुभं कर्म तादृशं लभते फलम् ॥
भुङ्क्ते तु विषयाकारं पूर्वकर्मवशाद्बुधः ।
यस्मादेवं विजानाति तस्मात्क्षेत्रज्ञ उच्यते ॥
विषयो बुध्यते यस्माद्बुद्धस्तस्मात्प्रकीर्तितः ।

என வருமாற்றான் உணர்க. 16

17. * * *

"ஈசுவரனிச்சை" யென்பது முதல் "இன்னதேசத்தில்" என்பதீறான ஐந்து செய்யுளாலும முன்......... பிரபஞ்சமென்பது கூறி...........புத்தனிலக்கணத்தை விளங்க விரித்தவாறு. இவற்றிற்குதாரணம் முன் காட்டியதேயாம். அவற்றுள், இன்ன தேசத்தென்பதற்கு,

यस्माच्च येन च यदा च यथा च यच्च
यावच्च यत्र च शुभाशुभमात्मकर्म ।
तस्माच्च तेन च तदा च तथा च तच्च
तावच्च तत्र च विधानवशादुपैति ॥

என வருமாற்றானும் உணர்க.

18, 19, 20, 21. * *

22. * * *

"புகன்ற வாறறிந்து" என்பது புத்தன் இலக்கணவுபதேசங்கள் கூறுமுகத்தாற் புத்தியமானனிலக்கணம் கூறுகின்றது. அதுவும் அதிலேயே கூறப்பட்டது.

विषयो बुध्यते यस्माद्बुद्धस्तस्मात्प्रकीर्तितः ।
तदेवानिष्टरूपेण यदासौ विषयेषु च ॥
बुध्यमानस्तु स यदा अधुना कथयामि ते ।
यदा जुगुप्सते लोकान्शुभांश्चैवाशुभांस्तथा ॥
कृतिमानिव मानीव परं वैराग्यमाश्रितः ।
मायाद्यवनिपर्यन्तमिन्द्रजालं तु बुध्यते ॥
पुत्रमित्रकलत्राणि सुहृत्स्वजनबान्धवान् ।
यदार्जितं यदा द्रव्यं शुभेन त्वशुभेन वा ॥
तद्भोक्ष्यन्ति तदा सर्वे निरातङ्का निराकुलाः ।
वयमेकाकिनश्चैव यास्यामो यमसादनम् ॥
तस्माच्च न शुभान्ये (ह्ये) ते वैरिणोऽनर्थकारिणः ।
स्वात्मीयमप्ययं देहं नित्यमेव जुगुप्सते ॥
शुक्रशोणितसंभूतं विषयाभोगभूषितम् ।
(आधि) व्याधिसमाकीर्णं जरामृत्युभयाकुलम् ॥
ततः सोऽहं मलाकीर्णे कथमत्र वसाम्यहम् ।
नित्यमुद्विग्नचित्तस्तु चिन्तयानः पुनः पुनः ॥
कथं मुक्तिर्भवेत्तस्मात्संसाराद्दुरतिक्रमात् ।
एवं प्रबुध्यमानस्तु गुर्वाराधनतत्परः ॥
बुध्यमानः समाख्यातः प्रबुद्धं कथयामि ते ।

என வருமாற்றான் உணர்க. 22

23. * * *

"தேசிகனருளினால்" என்பது பிரபுத்தன் இலக்கணம் கூறுகின்றது. அதுவும் அதிலேயே கூறப்பட்டது.

बुद्ध्यमानः समाख्यातः प्रबुद्धं कथयामि ते ।
गुरुप्रसादाद् देवेशि प्राप्तदीक्षः शिवाध्वरे ॥
यदालोचयते देवि शिवज्ञानमहोदयम् ।
करामलकवत्सर्वमध्वजातं स्वयम्भुवः ॥
शिवाद्यवनिपर्यन्तमीक्षते ज्ञानचक्षुषा ।
हेयं कृत्वा समस्तं तु उपादेयं परं शिवम ॥
उन्मन्यन्ते वरारोहे सर्वगं विभुमव्ययम् ।
एवं प्रबुद्धो देवेशि तल्लयस्तत्परायणः ॥
सर्वारम्भविनिर्मुक्तः प्रबुद्धस्तूच्यते बुधैः ।

என வருமாற்றான் உணர்க. 23

24. * * *

"தெரியுநூலறிவு" என்பது சுப்பிரபுத்த இலக்கணம் கூறுகின்றது. அதுவும் அதிலேயே கூறப்பட்டது.

विरजं विमलं शान्तं प्रपञ्चातीतगोचरम् ।
निष्कम्पं कारणातीतं सर्वज्ञं सर्वतोमुखम् ॥
सु..........सम्बद्धं स्वतन्त्रं नित्यमेव हि ।
चक्रेसाम विभवं सुप्रबुद्धं सनातनम् ॥
तस्मिन्तं मुक्तदात्मानं तद्गुणैश्च समन्वितम् ।
सुप्रबुद्धं.................. .... ॥ 24

25. * * *

"இன்னணம்" என்பது அவ்வாறு பலவகைப்பட்டு அநாதி...................பிறந்தனவாயுள்ள சீவான்மாககளுக்கெல்லாம இறைவன் வைரவனென்கின்றது... அநாதியே மூவகை உயிர்களும் உள என்றது அநாதியிற் சகலராய் மும்மலத்தோடு மிருந்தாரே பின்னர் விஞ்ஞானதிகளாலும் பிரளயத்தினலும்

விஞ்ஞாநாகலர்பிரளயாகலராவர் என்பதை மறுத்தற்கு. அன்றேல் முன்னர்ச் சிருட்டியிலேககாலத்தில் மூவகை யான்மாககளுந் தேகிகளாகிப் பெந்த மூன்றிலும் சகலர் பிரளயாகலர் விஞ்ஞானகலராயினர் என்பது கூடாதாம். இவ்வாறு அநாதியாயுள்ள மூவகை ஆன்மாக்களும் மாயா விக்ஷோபத்தால சம்சாரிகளாய் வீடடைந்துள் ளளவில் பஞ்சகிருத்தியம் ஒழியுமோ என்னும் ஐய மறுதற்கு அநாதி மன்னு கேவலத்தினின்றும் வாவா என்றது. பஞ்சகிருததிய விடயமாயுமாகாது கேவலத ....டகும வர்களாயுமுள்ள வான்மாககளுககோர் பரிமாணமில்லை என்பதற்கு உலவாககோட்டை உலவாக் கிழியை உதாகரித்தது. அது குறையாதென்பதற்கு மாத்திரமன்றி வர்த்திக்குமென்றற்கன்று. உயிர்கட்கு அளவில்லை என்பது சிவவிபுததுவாதிகட்குப் போலக கொள்க. அன்றி நித்தியமாயுள்ளது வர்த்தித்தாலும் நித்தியமாம். அநித்தியமாயுள்ளது வர்த்தித்தால அநித் தியமாவதுபோலென்பாரும உளர். 25

26. * * *

"இப்படிதா"னென்பது வைரவ தந்திர மார்க்கத் தொழுகினற் சித்தியும் முத்தியும வரும என்கின்றது. ஈண்டு இறையான வாதி வைரவனுகுஞ் சிவன் என்ப தற்கு வருமாறு. சுவச்சநதத்தில,

(अनादिनि) धनं देवं जटामकुटमण्डितम् ।
चन्द्रकोटिप्रतीकाशं चन्द्रार्धकृतशेखरम् ॥
पञ्चवक्त्रं विशालाक्षं सर्पमालासमन्वितम् ।
त्रिरिञ्चिकैरग्निवर्णाभैर्हरकण्ठो विराजते ॥
कपालजालाभरणं (खड्ग) खेटक धारिणम ।
पाशाङ्कुशधरं देवं शरहस्तं पिनाकिनम ॥
वरदाभयहस्तं च मुण्डखट्वाङ्गधारिणम् ।
वीणाडमरुहस्तं च घण्टाहस्तं (त्रि) शूलिनम् ॥

(वज्र) दण्डकृताटोपं परश्वायुध हस्तकम् ।
मुद्गरेण विचित्रेण ..... . विराजितम् ॥
सिंह्यचर्मपरीधानं गजचर्मोत्तरीयकम् ।
अष्टादशभुजं देवं नीलकण्ठं सुतेजसम् ॥
ऊर्ध्ववक्रं महेशानं स्फटिकाभं विचिन्तयेत् ।
(पीताभं) पूर्ववक्रं तु नीलोत्पलदलप्रभम् ॥
दक्षिणं तु विजानीयाद्वामं चैव विचिन्तयेत् ।
दाडिमी कुसुमप्रख्यं कुङ्कुमामोदसन्निभम् ॥
घर्माम्बुदप्रतीकाशं पश्चिमं तु विचिन्तयेत् ।
स्वच्छन्दं भैरवं देवं सर्वकामफलप्रदम् ॥
ध्यायेद्वै यस्तु मुक्तात्मा क्षिप्रं सिध्यति मानवः ।
ततः प(र)मबीजेन परं परमकारणम् ॥
प्रशान्त (कलुषं) देवं सर्वव्यापि निरञ्जनम् ।
मूलाद्धयायेत् सुहृष्टात्मा तादद्देवि वदाम्यहम् ॥

என வருமாற்றான் உணர்க. இனி அத்துவ சுத்தி பூருவமாக மூலமனுச்சேவை இயற்றுவது நிர்வாண தீக்ஷை பூருவம் மூலமந்திரம செபிப்பது. எனவே சுத்த சைவம் போலத் தீக்ஷா பேதமுண்டென்றதூஉ மாயிற்று. அது அந்த சுவச்சந்தத்தில,

कलादीक्षा सुरेशान कथिता परमेश्वर ।
तत्त्वदीक्षां समासेन कथय (स्व ममाधुना) ॥

என்றற் றொடககத்தாற் கூறும் தீக்ஷா படலத்திற் காண்க. இனி மூலமந்திர சேவையாமாறு, சுவச்சந் தத்தில் பிராஸாதவிதி படலங்களில சிவப்பிராப்தி படலத்தில்,

अकारश्च उकारश्च मकारो बिन्दुरेव च ।
अर्धचन्द्रो निरोधी च नादश्चैवोर्ध्वगामिनी ॥

शक्तिश्च व्यापिनी ह्येताः समना च ततः परम् ।
समनान्तं वरारोहे पाशजाल मनन्तकम् ॥
कारणैः षड्भिराक्रान्तं मन्त्रस्थं हेयलक्षणम् ।
अत्र पाशोपरि (नि) ह्यात्मा व्योमवच्चित्सुनिर्मलः ॥
शिवतत्त्व गुणामोदाच्छिवधर्मावलोककः ।
पाशावलोकनं त्यक्त्वा स्वरूपालोकनं हि यत् ॥
शिवव्याप्तिर्भवेदेषा शिवव्या ... . तो यथा ।
सर्वज्ञादि गुणा ये स्युर्व्यापकान् भावयेत्सदा ॥
शिवव्याप्तिर्भवेदेषा चैतन्ये हेतुरूपिणी ।
ततो धर्मस्वभावो हि शिवः शान्तस्तु पठ्यते ॥
तन्मनाश्चापरो ग्राह्य आत्मबोधे .. ..नः ।
व्यापारं मानसं त्यक्त्वा बोधरूपे नियोजयेत् ॥
तदा शिवः समायाति पशुर्मुक्तो भवार्णवात् ।

என்பது முதலியவைகளால் உணர்க. ஒரு புவனத்தில் இருப்பவராகக் கேட்கப்படாத அந்தப் பைரவ சதாசிவர் யாரெனில்,

सदाशिवस्वरूपेण व ....षु नित्यतः ।
कैलास गिरि (शृङ्गेतु) स्थितोऽहं सर्वदा हरे ॥

என வருமாற்றால் சதாசிவ ரூபமான ருத்திரமூர்த்தி பேதமானவர் என்க. இந்த ருத்திரமூர்த்தி பேதமல்லா மற்பிற ருத்திரமூர்த்தியானவர்கள் பேதமல்லர் பைரவ மூர்த்தி என்பதற்கு வருமாறு பிர்மாண்டமென்று பெயருள்ள சிவபுராணத்தில்,

मुनयः—

कथं देवेन रुद्रेण............ ...... ।
कथं नखावलूनं तद्ब्रह्मणः पञ्चमं शिरः ॥

விசேஷ வழிபாடுகள்.

31—8—51ல் ஆதீனத்துக்குச்சொந்தமான குத்தாலம் ஸ்ரீ உக்தவேதீசுவர சுவாமி ஆலயத்திலும், 6—9—51ல் தருமபுர ஆதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவராலயத்திலும், 7-9-51ல் பேரளம் சுயம்புநாதசுவாமி ஆலயத்திலும்பஞ்சமுகார்ச்சனை நவசக்தி அர்ச்சனை, சந்தனக்காப்பலங்காரம் ஆகிய விசேஷ வழிபாடுகள் சிறப்பாக நடந்தன. ஆதீனத்திருக்கூட்ட அடியார்களும், ஆதீனக்கல்லூரிப் பேராசிரியர்களும் செ பொழிவு நிகழ்த்தினர்கள். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் களும் எழுந்தருளியாகித் தெரிசனம் செய்தருளினா அன்பர்கள் வந்து கண்டும் கேட்டும் இன்புற்றார்கள்.

ஜன்மநக்ஷத்திரத் திருநாள்.

தருமபுர ஆதீனம் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அ களின மாத ஜன்ம நக்ஷத்திரநாட்களில் திருப்பதிகம்பெ சிவஸ்தலங்களில் ஆதீனச்சார்பில் அபிஷேக ஆராதனை செய்வித்துத் தலப்பதிகத்தையும் அச்சிட்டு வழங்கி வரு போல, இம்மாதத்திலும் 4—9—51 அன்று திருச்சோற் துறை ஸ்ரீ தொலையாச் செல்வர் ஆலயத்தில் அபிஷேக ஆ தனை செய்வித்துத் தலப்பதிக வெளியீடும் வழங்கப்பெற்ற

ஆதீனக்கல்லூரி ஸ்ரீ குருஞானசம்பந்தர் கழகம்

இக்கழகத்தின் இவ்வாண்டுத் தொடக்கவிழா கல்லூ மண்டபத்தில் 23—8—51 மாலை 5 மணிக்கு நடைபெற்றத கல்லூரித்தலைவர் பிர்மஸ்ரீ ய. மகாலிங்கசாஸ்திரிகள் அவர்க வரவேற்புரை கூறி, தலைவருக்கு மலர்மாலை சூட்டினர்கள் மாயூரம் அரசியலார் மருத்துவச்சாலைத்தலைவர் பிர்ம ஸ்ரீ காப்டன் A. சுந்தரம் அவர்கள் விழாவைத்தொடங்கிவைத் மாணவர்கள் கடமையை விளக்கிக் கூறினர்கள். கழக செயலாளர் சொ. சிங்காரவேலன் நன்றியுரைகூற, கடவு வாழ்த்துடன் விழா இனிது முடிந்தது.

Regd. No. M. 4454.   GNANASAMBANDAM

திப்புரை :

வேதாகம நிரூபணம்

[இரண்டாம் பாகம்]

தன் முதற்பாகத்தைப்பற்றி முன்னமே அன்பர் கு அறிவித்திருக்கிறோம். இப்பொழுது இரண்டாம் ம் கிடைக்கப்பெற்றோம். இதுவும் பல அன்பர்களின் ் பொருளுதவியால் வெளிவந்துள்ளது. 'வேதாகமங்கள் வன் வாக்கல்ல; வேத அறிவோ ஆகம அறிவோ டியதில்லை. வடமொழிவேதம் வேறு தமிழ்வேதம்வேறு; ங்களைச் சொல்லி மக்களை ஏமாற்ற முடியாது; ஒன்றே வும் என்று கூறியிருக்கச் சாதி பேதம்காட்டி மக்களை வுபடுத்துவதேன்? சிறுதெய்வங்கட்குப்புராணம்கட்டுவது தவழக்கு. நினைத்தபடி தெய்வம் அமைத்து அதற்குப் ணம் பாடுவதும் ஒருசாரார் செயல்' என்பன போன்ற விபரீதக் கொள்கைகளை எடுத்துக்கொண்டு ஒவ்வொன் பும் தனித் தனியாக மறுத்துள்ளார் ஆசிரியர். மறுப்பும் ரத்தோடு ஸ்மிருதிகள், திருமுறைகள், சங்க இலக்கியங் இவைகளிலிருந்தும் ஆறுமுகநாவலர், சிவக்கவிமணி K. சுப்பிரமணிய முதலியார் உள்ளிட்ட பேரறிஞர்களின் ற்றுக்களைக்கொண்டும் தர்க்கவாயிலாக அமைந்துள்ளது. ிழன்பர்கள் அனைவரும் படிக்கவேண்டிய நூல்களில் துவும் ஒன்று. இதன் ஆசிரியர் சிவஸ்ரீ குமாரசாமி ருக்கள். பக்கம் 88. விலை ரூ. 1.

டைக்குமிடம் :-

சைவ ஆராய்ச்சி சங்கம், கரணவாய், யாழ்ப்பாணம்.

ed & Published by K. Sundaresa Iyer, Agent, Dharmapuram Adhinam at the Gnanasambandam Press, Dharmapuram, (Mayuram) 9—9—1951.